# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு ஆர். வெங்கடாசலம்,**
**மேயர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி,**
**கோயம்புத்தூர்- 641 001**

**பெறுநர்**

**மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,**
**ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,**
**வார்டு குழுத் தலைவர்கள்,**
**நியமனக்குழு உறுப்பினர்,**
**நிலைக்குழு தலைவர்கள் மற்றும்**
**அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி.**

**அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி.**

**சட்டமன்ற உறுப்பினர்கள்**
**(சிங்காநல்லூர் , கோவை தெற்கு,**
**கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்**
**சட்டமன்ற தொகுதிகள்),**

**பாராளுமன்ற உறுப்பினர்கள்**
**(கோவை மற்றும் பொள்ளாச்சி**
**பாராளுமன்றத் தொகுதிகள்)**

**ந.க.எண் : 5594/ 2011 / எம்சி. 8 நாள் : 04 .08.2011**

**அய்யா /அம்மா,**

**பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.**

-----------

**கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 10.08.2011 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**இணைப்பு : 1**

**/உண்மை நகல் /**

**மாமன்ற செயலாளர்**

**நகல் :**

**துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**
**ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**

# மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஆகஸ்ட் 2011

## (நிகழ்ச்சி நிரல்)

| | |
|---|---|
| | பொருளடக்கம் |
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| வ. எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | Jnnurm – பாதாள சாக்கடைத் திட்டம் - நாகப்பட்டினம்-மைசூர் தேசிய நெடுஞ்சாலை - கழிவுநீர் குழாய் அமைக்கும் பணி - சாலை சீரமைப்புக் கட்டணம் செலுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 2 | Jnnurm – பாதாள சாக்கடைத் திட்டம் - 4 மாநில நெடுஞ்சாலை - கழிவுநீர் குழாய் அமைக்கும் பணி – சாலை சீரமைப்புக் கட்டணம் செலுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | Jnnurm – பில்லூர் குடிநீர் திட்டம் - இராமகிருஷ்ணாபுரம் மேல்நிலைத் தொட்டி முதல் சிங்காநல்லூர் வரை குடிநீர் குழாய் அமைத்தல் பணி – மறு ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| 4 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 62 – அண்ணா நகர் மாநகராட்சி சமுதாயக் கூடம் - வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் மேடை கடைகள் - மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – கடைகள் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - 2011-14 ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்தல்- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - காந்திபார்க் உடற்பயிற்சி சாலை – ஒப்பந்தப்புள்ளி கோரியது – மறு ஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் -ரங்கே கவுடர் வீதி -நவீன மலர் அங்காடி வணிக வளாக கடைகள் - மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒதுக்கீடு செய்தல் மற்றும் மறு ஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 30 – ஆம்னி பேருந்து நிறுத்தம் - அரசு கம்பிவட தொலைக்காட்சி கழகத்திற்கு வாடகை நிர்ணயம் செய்து அறை ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 10 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - 2011-14 ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்தல்- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 30 – குத்தகை இனம் புல் மார்க்கெட் - 7 கடைகள் - பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 12 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - 2011-14 ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்தல்- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 13 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 33- சிவானந்தாகாலனி அறிவியல் பூங்கா – கட்டணம் நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 14 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - உக்கடம் பேருந்து நிலையம் - தி/ள். பாரதி புத்தகாலயம் நிறுவனம் - புத்தக கடை ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 15 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - 5 குத்தகை இனங்கள் - மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒதுக்கீடு செய்தல் மற்றும் மறு ஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 16 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - வணிக வளாக கடைகள் -- மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒதுக்கீடு செய்தல் மற்றும் மறு ஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 17 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - பழைய மீன் மார்க்கெட் வளாகம் - இருசக்கர வாகன நிறுத்துமிடம் - கட்டணம் வசூல் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 18 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - மாநகராட்சி வணிக வளாக கடைகள் - உரிமக்காலம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 19 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 47 – சின்ன எல்லைய சந்து – மாநகராட்சி ஆரம்பப்பள்ளி- படிப்பக அறை கட்டுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 20 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் -வார்டு எண்.62 - ராமலிங்க நகர் மாநகராட்சி சமுதாய கூடம் - வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 21 | Jnnrum- பாதாள சாக்கடைத் திட்டம் - 11 உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்துதல் - திட்ட அறிக்கை தயாரித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 22 | கணக்குப் பிரிவு - தமிழ்நாடு குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் - கடன் பத்திரம் வெளியிடுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 23 | பணியமைப்பு - திரு ஆ. அமுல்ராஜ், சுகாதார ஆய்வாளர் - மாமன்ற செயலாளராக நியமனம் செய்தல் - அரசுக்கு பரிந்துரை செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 24 | பொறியியல் பிரிவு - குடிநீர் விநியோகம் - கட்டணம் மற்றும் துணை விதிகள் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 25 | நகர்நல பிரிவு - வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பட்டியல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

**அ)** **திருக்குறள்**

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்
ஆக்கம் பலவுந் தரும்.

(குறள் 492)

**விளக்கம்**

வரும்பகையை எதிர்க்கும் வலிமை இருப்பினும், அத்துடன் அரணைச் சார்ந்து போரிடும் வாய்ப்பும் இணையுமானால் பெரும்பயன் கிட்டும்.

திருவள்ளுவர்

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**29.07.2011 ம் தேதிய மாமன்ற அவசரக் கூட்டப் பொருள்கள் (பொருள் எண் 1 முதல் 19 வரை)**

**பொருள் எண் 1**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 377.13 கோடி செலவில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் ஆறு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு அதில் மூன்று சிப்பப்பணிகள் கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள் பதிக்கும் பணிகளாக நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு சிப்பப்பணியாக, மண்டலங்கள் I,II,V மற்றும் VI உள்ளடங்கிய சிப்பம் I பணியில் பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் கழிவுநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கும் பணி ரூ. 69.65 கோடி செலவில் மேற்கொள்ள தி/எ். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஸ்ஷன்ஸ் கம்பெனி லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திற்கு பணி ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இப்பணியில் ஒரு பகுதியான நாகபட்டினம்–கூடலூர்–மைசூர்(தெ. நெ 67) தேசிய நெடுஞ்சாலையின் இரு ஓரங்களிலும் கழிவுநீர் குழாய்கள் 500 மி.மீ விட்டம் கொண்ட ஆர்.சி.சி. குழாய்கள் 1.45 கி.மீ நீளத்திற்கு பதிக்கும் பொருட்டு மேற்படி துறையின் அனுமதி கோரப்பட்டதில் மேற்படி சாலையை வெட்டுவதால் சேதமடையும் சாலையை சீரமைப்பதற்காக ரூ. 1,56,20,000/– செலுத்த தேசிய நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து கோரப்பட்டது.

| வ. எண். | தேசிய நெடுஞ்சாலை விபரம் | கழிவுநீர் குழாய் பதிக்கப்படவுள்ள சாலையின் நீளம் | மாநகராட்சி செலுத்த வேண்டிய சாலை சீரமைப்பு கட்டணம் |
|---|---|---|---|
| 1. | தேசிய நெடுஞ்சாலை கோட்டம் (கோவை) நாகபட்டினம்–கூடலூர்–மைசூர்(தெ. நெ 67) | 1.45 கி.மீ. | ரூ. 1,56,20,000 |
| சாலை சீரமைப்புக் கட்டணத் தொகை | | | ரூ. 1,56,20,000 |

இச்சிப்பப்பணியின் மதிப்பீடு தயாரிக்கும் போது சில்லரை செலவினங்களுக்காவும், கழிவு நீர் குழாய்கள் பதிக்கும் பொருட்டு தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, இரயில்வே துறை உள்ளிட்ட பிற துறைகளுக்கு சாலை சீரமைப்பு கட்டணம் செலுத்தவும் ரூ. 10.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு இருந்ததால், மேற்குறிப்பிட்ட தேசிய நெடுஞ்சாலையில் பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் மற்றும் சோதனை குழிகள் அமைக்கப்படும்போது தோண்டப்படும் சாலைகளை சீரமைக்க, சாலை சீரமைப்புக் கட்டண தொகையாக ரூ. 1,56,20,000/– (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தாறு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலைத் துறை அவர்களுக்கு, பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் அவர்கள் ஒப்புதல் பெற்று கடந்த 24.05.2011–ந் தேதி செலுத்திய விபரத்தினை, மாமன்றம் பதிவு செய்யலாம்.

அலுவலகக் குறிப்பு : தேசிய நெடுஞ்சாலை துறைக்கு சாலை சீரமைப்பு கட்டண தொகையாக ரூ. 1,56,20,000/– செலுத்திய விபரத்தினை, மாமன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண் : 1684/09/JN4**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 41 நாள் 10.08.2011</u>**

தேசிய நெடுஞ்சாலைத்துறைக்கு சாலை சீரமைப்புக் கட்டணத் தொகை ரூ. 1.56.20.000/- செலுத்தப்பட்ட விபரம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

---

**பொருள் எண் 2**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 377.13 கோடி செலவில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் ஆறு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு அதில் மூன்று சிப்பப்பணிகள் கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள் பதிக்கும் பணிகளாகும். இதன் ஒரு சிப்பப்பணியானதும், மண்டலங்கள் IV மற்றும் VIII உள்ளடங்கிய சிப்பம் III பணியில் பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் கழிவுநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கும் பணி ரூ. 113.33 கோடி செலவில் மேற்கொள்ள தி/எ். TVRCL-HNBPL, ஹைதராபாத் என்ற நிறுவனத்திற்கு பணி ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இப்பணியில் கீழ்கண்ட மாநில நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் கழிவுநீர் குழாய்கள் 450 மி,மீ விட்டம் முதல் 1300 மி.மீ விட்டம் வரையிலான ஆர்.சி.சி. பைப்புகள் அமைக்க வேண்டியுள்ளது. மாநில நெடுஞ்சாலைகளில் பாதாள சாக்கடை குழாய்கள் பதிக்க நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையை வெட்டவும், அதற்கான சாலை சீரமைப்பு கட்டணம் செலுத்தவும் கீழ்க்கண்ட விபரப்படி சீரமைப்பு கட்டணம் செலுத்த நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து கேட்பு பெறப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **மாநில நெடுஞ்சாலை விபரம்** | **கழிவுநீர் குழாய் பதிக்கப்படவுள்ள சாலையின் நீளம்** | **மாநகராட்சி செலுத்த வேண்டிய சாலை சீரமைப்பு கட்டணம்** |
|---|---|---|---|
| | **உதவி கோட்டம் (வடக்கு)** | | |
| 1. | சேலம் – கொச்சின் சாலை கி.மீ. 150/6 – 154/4 | 3.80 கி. மீ | ரூ. 6,95,65,000 |
| 2. | கணபதி – ஆவராம்பாளையம் சாலை கி. மீ. 0/0 – 1/060 | 1.060. கி. மீ | ரூ. 16,85,000 |
| 3. | கணபதி – கணுவாய் சாலை (வழி) மணியகாரம்பாளையம் கி.மீ. 0/0 – 2/243 | 2.243 கி. மீ | ரூ. 1,05,80.900 |
| | | மொத்தம் | ரூ. 8,18,30,900 |
| | **உதவி கோட்டம் (தெற்கு)** | | |
| 4. | சிங்காநல்லூர் – பீளமேடு சாலை<br>கி. மீ. 0/0 – 0/500<br>கி. மீ. 0/500 – 1/300<br>கி. மீ. 1/300 – 1/900<br>கி. மீ. 1/900 – 2/500<br>கி. மீ. 2/500 – 2/861 | 0.500 கி. மீ<br>0.800 கி. மீ<br>0.600 கி. மீ<br>0.600 கி. மீ<br>0.361 கி. மீ | ரூ. 21,75,000<br>ரூ. 28,00,000<br>ரூ. 21,30,000<br>ரூ. 21,00,000<br>ரூ. 9,50,000 |
| மொத்தம் | | | ரூ. 1,01,55,000 |
| மொத்தம் செலுத்த வேண்டிய சாலை சீரமைப்புக் கட்டணத் தொகை | | | **ரூ. 9,19,85,900** |

மேற்குறிப்பிட்டுள்ள மாநில நெடுஞ்சாலைகளில் பாதாள சாக்கடைக் குழாய்கள் மற்றும் கழிவு நீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கவும், சாலை சீரமைப்புக் கட்டண தொகையில் ரூ. 8,18,30,900/– (ரூபாய் எட்டு கோடியே பதினெட்டு இலட்சத்து முப்பதாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) உதவி கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை (வடக்கு), மற்றும் ரூ. 1,01,55,000/– (ரூபாய் ஒரு கோடியே ஒரு இலட்சத்து ஐம்பத்தைந்து ஆயிரம் மட்டும்) உதவி கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை (தெற்கு), அவர்கள் செலுத்த மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

இச்சிப்பப்பணியில் தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, இரயில்வே கிராஸிங் பகுதியில் கழிவு நீர் குழாய்கள் வெட்டி அமைக்க மதிப்பீட்டில் ரூ. 8.92 கோடி தொகை சீரமைப்பு கட்டணமாக செலுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் தற்போது 4 (நான்கு) மாநில நெடுஞ்சாலைகளில் மட்டும் கழிவுநீர் குழாய்கள் பதிக்க பெறப்பட்டுள்ள சாலை சீரமைப்பு கட்டணமாக கேட்பு ரூ. 9.20 கோடி செலுத்த வேண்டியுள்ளதால் மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கும் கூடுதலான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்தவும் மாமன்றம் ஒப்புதல் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

பாதாள சாக்கடை திட்டத்தில் கழிவுநீர் குழாய் அமைக்கும் இப்பணி மதிப்பீட்டில் ரூ. 8.92 கோடி தொகை நெடுஞ்சாலை, இரயில்வே துறைக்கு சம்பந்தமான பகுதியில் கழிவுநீர் குழாய்கள் பதிக்க உண்டான சீரமைப்பு கட்டணம் செலுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், தற்போது 4 (நான்கு) மாநில நெடுஞ்சாலைகளில் மட்டும் கழிவுநீர் குழாய்கள் பதிக்க பெறப்பட்டுள்ள சாலை சீரமைப்பு கட்டணமாக கேட்பு ரூ. 9.20 கோடி செலுத்த மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையுடன் கூடுதலான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த மாமன்றம் ஒப்புதல் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் : 1469/09/JN4**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 42 நாள் 10.08.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

கோவை மாநகராட்சி, பில்லூர் குடிநீர்த் திட்டம் பகுதி I ன் கீழ் இராமகிருஷ்ணாபுரத்தில் உள்ள பிரதான மேல்நிலை தொட்டியிலிருந்து கிழக்கு மண்டல பகுதிகளான பீளமேடு, மசக்காளிபாளையம், சௌரிபாளையம், வரதராஜபுரம், நீலிக்கோணாம்பாளையம், சிங்காநல்லூர், ஒண்டிப்புதூர், SIHS காலனி மற்றும் நேதாஜிபுரம் பகுதிகள் அடங்கிய வார்டு எண்கள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 பகுதி, 11 பகுதி மற்றும் வார்டு எண் 16 பகுதிகளில் குடிநீர் வழங்க பதிக்கப்பட்டுள்ள 400 மி.மீ மற்றும் 500 மி.மீ விட்டமுள்ள ஏ.சி. குழாய்கள் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதால், அதற்கு பதிலாக முதற்கட்டமாக 5.70 கி.மீ. நீளத்திற்கு மட்டும், 1100 மி.மீ. மற்றும் 700 மி.மீ விட்டமுள்ள இரும்பு குழாய் (MS Pipe) பதிக்கவும் அதற்கான நிதியாக இயக்கம் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் மானிய நிதி மற்றும் மாநகராட்சி பங்கு நிதியுடன் சேர்த்து ரூ. 8.50 கோடி செலவில் பெற்று இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி கீழ்கண்டவாறு மாமன்ற தீர்மானம் எண். 164 நாள். 14.12.2010–ன் படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்(டி): 72, நாள்: 15.02.2011–ல் பெறப்பட்டது.

**<u>(O & M Gap filling fund 2009 - 2010)</u>**

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில் | அரசு மானியத் தொகை ரூபாய் இலட்சத்தில் | மாநகராட்சி பங்குத் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | இராமகிருஷ்ணாபுரம் பிரதான மேல்நிலை தொட்டியிலிருந்து சிங்காநல்லூர் வரையிலான பிரதான குழாய் மெயின் 500 / 400 மி.மீ விட்டமுள்ள ஏ.சி. விநியோக மெயினுக்கு பதிலாக 1100/700 மி.மீ. விட்டமுள்ள இரும்பு குழாய் (MS pipe) 5.70 கி.மீ நீளத்திற்கு அமைத்தல் பணி | 850.00 | 444.00 | 406.00 |

இப்பணி மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் (CEER No: 215/2010-11, நாள்: 22/02/2011) தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, கடந்த 30.03.2011–ல் முதன் முறையாக E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ் குறிப்பிட்டுள்ள ஒரு நிறுவனம் தி/ள். சாய்சுதிர் இன்பராஸ்ட்ரக்சர்ஸ் லிட், ஹைதராபாத் மட்டும் கலந்துகொண்டு தொழில்நுட்ப தகுதி மற்றும் விலைப்புள்ளி அடங்கிய ஒப்பந்தப்புள்ளி வழங்கியது. மேற்படி நிறுவனத்தின் தொழில்நுட்ப தகுதி மாநில அளவிலான தொழில்நுட்ப கூராய்வுக் குழுவின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு மேற்படி நிறுவனம் தகுதி பெற்றதால் 13.06.2011–ல் ஒப்பந்தவிலைப்புள்ளி (Financial Bid) திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தவிலைப்புள்ளி மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக இருந்ததால் விலைகுறைப்பு செய்திட கீழ்கண்ட தேதிகளில் கோரப்பட்டதில் மேற்படி நிறுவனத்தால் வழங்கப்பட்ட விலைகுறைப்பு விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வ. எ ண் | வேலையின் பெயர் | ஒப்பந்த மதிப்பிட்டுத் தொகை | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | விலைக் குறைப்பு நாள் | ஒப்பந்தவிலைப் புள்ளி விபரம் மற்றும் விலைக் குறைப்பு விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | இராமகிருஷ்ணாபுரம் பிரதான மேல்நிலை தொட்டியிலிருந்து சிங்காநல்லூர் வரையிலான பிரதான குழாய் மெயின் 500 / 400 மி.மீ விட்டமுள்ள ஏ.சி. விநியோக மெயினுக்கு பதிலாக 1100/700 மி.மீ. விட்டமுள்ள இரும்பு குழாய் (MS pipe) 5.70 கி.மீ நீளத்திற்கு அமைத்தல் பணி | ரூ. 8,39,83,901.46 | தி/ள். சாய்சுதிர் இன்பராஸ்ட்ரக்சர்ஸ் லிட், ஹைதராபாத். | ஒப்பந்த விலைப்புள்ளி திறக்கப்பட்ட நாள் 13.06.2011.<br><br>முதல் விலை குறைப்பு செய்த நாள் 22.06.2011<br><br>இரண்டாவது விலைக்குறைப்பு கோரிய நாள் 23.06.2011<br><br>மூன்றாவது விலைக்குறைப்பு கோரிய நாள் 04.07.2011 | ரூ. 9,41,59,287.87 ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 12.12% சதவீதம் அதிகம்<br><br>ரூ.9,32,17,695.00 ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 10.99% கூடுதல்<br><br>விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்து கடிதம் 27.06.2011ல் தந்துள்ளனர்.<br><br>விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்து கடிதம் 06.07.2011ல் தந்துள்ளனர். |

மேற்படி நிறுவனம் மூன்றாவது முறையாகவும் விலைக்குறைப்பு செய்திட இயலாதென தெரிவித்துள்ளது. மேற்படி ஒப்பந்தவிலைப்புள்ளி விலைகுறிப்பிற்குப் பின்னர் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 10.99% கூடுதலாக உள்ளதால் (ஒப்பந்த மதிப்பு ரூ.9,32,17,695.00) முதல் முறையாக பெறப்பட்டுள்ள ஒரு ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோருவது குறித்து மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்ய பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு:**

மேற்கண்ட பணிக்கு முதன்முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தவிலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள தி/ள். சாய்சுதிர் இன்பராஸ்ட்ரக்சர்ஸ் லிட், ஹைதராபாத். என்ற நிறுவனம் வழங்கிய ஒரே ஒரு ஒப்பந்தவிலைப்புள்ளி விலைக்குறைப்புக்கு பின்னரும் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 10.99% கூடுதலாக உள்ளதாலும் (விலை குறைப்பிற்கு பின்னரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.9,32,17,695.00) இவ்வொப்பந்தப்புள்ளியினை **ரத்து செய்து, மறு ஒப்பந்தப்புள்ளி கோர** மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

ந.க.எண். 7504/09/ஜே.என். 4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 43 நாள் 10.08.2011**

ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண்.62-க்குட்பட்ட அண்ணா நகரில் உள்ள மாநகராட்சி சமுதாய கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்தல் - தொடர்பாக.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண்.62-க்குட்பட்ட அண்ணா நகரில் உள்ள மாநகராட்சி இடத்தில் முதல் தளம் சுமார் 69.88 சதுர மீட்டர் பரப்பளவிலும், தரை தளம் சுமார் 69.88 சதுர மீட்டர் பரப்பளவிலும் சமுதாய கூடம் தற்பொழுது கட்டி முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு வாடகை அடிப்படையில் விட தயாராக உள்ளது.

இக்கட்டிடத்திற்கு பொதுப் பணித்துறையின் கட்டிட மதிப்பின்படியும், பதிவுத்துறையின் நிலமதிப்பின் படியும் நாள் ஒன்றுக்கு ரூ.312/- வாடகையாக நிர்ணயம் செய்யலாம் என உதவி நிர்வாக பொறியாளர் (மேற்கு) அவர்கள் குறிப்பு கொடுத்துள்ளார்.

எனவே, மேற்கண்டவாறு நாள் ஒன்றுக்கு ரூ.312/- வாடகை நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில், மேற்படி சமுதாயக் கூடத்திற்கு தினசரி வாடகையாக ரூ. 500/- நிர்ணயம் செய்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 17 நாள் 8.7.11ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 3330 /11/D1(W)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 44 நாள் 10.08.2011

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 17 நாள் 08.07.2011 ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

**பொருள்:-** கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் மேடைகடைகளுக்கு 25.01.2011 அன்று மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. உச்சக் கேள்விதாரர்களுக்கு கடைகள் ஒப்படைத்தல் - தொடர்பாக.

**பார்வை :-** வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.31 நாள் 08-07-2011

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் மேடைகடைகளுக்கு 25.01.2011 அன்று பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. இதில் கீழ்க்குறிப்பிட்ட கடைகளுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ள உயர்ந்தபட்ச மாத உரிமம் தொகை கோரப்பட்டுள்ளது.

**அ. பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் மேடைகடைகள்**

| வ. எ ண். | கடை எண் | ஏலதாரர் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகை மதிப்பு | தினசரி வாடகை கட்டணம் உச்ச கேள்வி தொடர்பாக | | உயர்ந்தபட்ச ஏலம்/ ஒப்பந்தபுள்ளி |
|---|---|---|---|---|---|---|
| | | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப்-புள்ளி தொகை ரூ. | |
| 1 | F63 | என். ரவிச்சந்திரன் | 40 | 50 | --- | 50 |
| 2 | F63 | எம். அருண் சங்கர் | 40 | ---- | --- | --- |
| 3 | F68 | வி. கோவிந்தராஜ் | 40 | ---- | --- | --- |
| 4 | F68 | எஸ். முகமது இக்பால் | 40 | 50 | --- | 50 |

அ. F 63 மற்றும் F 68 ஆகிய கடைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட தினசரி அரசு மதிப்பிற்கு கூடுதலாக உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை பெறப்பட்டுள்ளதால் மேற்படி கடைகளை சம்பந்தப்பட்ட உயர்ந்தபட்ச ஏலதாரர்களுக்கு உரிமம் ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 31 நாள். 08-07-2011- ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண். 5024/2006/ அ1 (மே)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 45 நாள் 10.08.2011

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 31 நாள் 08.07.2011 ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்குமண்டலம் 2011-14–ம் ஆண்டிற்கு 02.06.2011 நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் உயர்ந்தபட்ச கேள்விதாரருக்கு குத்தகை உரிம இனங்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒப்படைத்தல் - தொடர்பாக.

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 27 நாள். 08-07-2011

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குத்தகை இனங்கள் 2011-2014 மூன்றாண்டுகளுக்கு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 02-06-2011 –ம் தேதியில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச கேள்விதாரருக்கு கீழ்கண்டவாறு ஒப்படைக்கப்படுகிறது.

**அ. தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி கட்டணம் வசூலிக்கும் உரிமம் (வருடாந்திர அடிப்படையில் )**

| வ எண். | ஏலக் கேள்வி ஒப்பந்தப்புள்ளி கோரிய ஏலதாரர்கள் | நிர்ணயம் செய்யப்பட்ட தொகை | உயர்ந்தபட்ச மின் ஏலக் கேள்வித்தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு.M ராஜ்குமார் | 399669 | - | 315000 |
| 2 | திரு.M.மனோகரன் | 399669 | - | 300000 |
| 3. | திரு.A.சாதிக் பாஷா | 399669 | - | 230000 |

31.01.2001 அன்று ரூ.1,66,666/-ம், 9.02.2011 ல் ரூ. 300000/-ம் 17.02.2011ல் ரூ 3,10,000/-ம் மற்றும் தற்போது 2.06.11ல் நடைபெற்ற ஏலத்தில் அதிகபட்சமான ரூ 3,15,000/- ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டுள்ளது.

**ஆ . மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்கெட் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (வருடாந்திர அடிப்படையில்)**

| வ எண். | ஏலக் கேள்வி ஒப்பந்தப்புள்ளி கோரிய ஏலதாரர்கள் | நிர்ணயம் செய்யப்பட்ட தொகை | உயர்ந்தபட்ச மின் ஏலக் கேள்வித்தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு.M அப்பாஸ் | 348222 | - | 233333 |
| 2 | திரு.M.A. கலில் ரஹ்மான் | 348222 | - | 210000 |
| 3. | திரு.M.மனோகரன் | 348222 | - | - |

31.01.2001 அன்று ரூ.2,20,000/-ம், 9.02.2011 ல் ரூ. 2,25,000/-ம் 17.02.2011ல் ரூ. 2,30,000/- ம் மற்றும் தற்போது 2.06.11ல் நடைபெற்ற ஏலத்தில் அதிகபட்சமான ரூ. 2,33,333/- ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டுள்ளது.

எனவே தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி கட்டணம் வசூலிக்கும் உரிமம் இனத்திற்கு 02.06.2011 ல் நடைபெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.எம்.ராஜ்குமார் என்பவருக்கும் மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்க்கெட் கட்டணக்கழிப்பிடம் உரிம இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு. எம். அப்பாஸ் என்பவருக்கும் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்றுக்கொண்டு மேற்படி இனத்தினை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.27. நாள் 08-07-2011-ன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : - அனுமதிக்கலாம் ந.க. எண். 104/2011 அ1 (மே)

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 46 நாள் 10.08.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 27 நாள் 08.07.2011 ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் 2011 –2014-ம் ஆண்டிற்கு உடற்பயிற்சி சாலையை ஒப்படைக்க 02.06.2011 ல் மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் உச்ச கேள்விதாரர் அவர்களுக்கு ஒப்படைக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழுவுக்கு பொருள் வைக்கப்பட்டதில் வரி விதிப்பு மற்றும் நிதிக் குழு தீர்மானத்தில் மிகக் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்டுள்ளதால் மறுஏலம் நடத்த மாமன்றத்திற்கு பொருள் வைப்பது தொடர்பாக.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட காந்திபார்க் உடற்பயிற்சி சாலை மற்றும் லாலிரோடு உடற்பயிற்சிசாலை 2011 -2014 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைத்தல் மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 02-06-2011-ம் தேதியில் நடைபெற்றது. அதில் கீழ்கண்ட ஏலதாரர் உயர்ந்தபட்ச கேள்வி தொகை கோரப்பட்டது.

**<u>காந்திபார்க் உடற்பயிற்சிசாலை (வருடாந்திர அடிப்படையில் )</u>**

| வ.எண். | ஏலக் கேள்வி ஒப்பந்தப்புள்ளி கோரிய ஏலதாரர்கள் | நிர்ணயம் செய்யப்பட்ட தொகை (மாதம்1-க்கு) | உயர்ந்த பட்ச மின் ஏல கேள்வித் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | A.முரளிதரன் | ரூ.900 | - | ரூ.1100 |
| 2 | S.P.S.சுப்பிரமணியன் | ரூ.900 | - | ரூ.1000 |

மேற்கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயித்த மதிப்பை விட அதிகமாக ஏலத்தொகை கோரிய திரு. A.முரளிதரன் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

மேலும் லாலிரோடு உடற்பயிற்சிசாலை திரு.M.சத்யமூர்த்தி என்பவர் ஏலம் நடைபெற்றுக்கொண்டிருந்த 02-06-2011-ம் தேதியன்று FAX-ல் தான் மாநகராட்சிக்கு எதிராக இடைக்கால தடை உத்திரவு O.S.எண்: 959/2011-ன்படி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து அதில் I.A.எண்: 1105/2011-ன்படி லாலி ரோட்டில் உள்ள மாநகராட்சி உடற்பயிற்சிசாலையினை தற்போது உள்ளது உள்ள நிலையிலேயே இருக்க வேண்டும் என இடைக்கால தடை உத்திரவு பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இடைக்கால தடை உத்திரவு ரத்து செய்த பின்னர் மறுஏலம் விடவும் காந்திபார்க் உடற்பயிற்சி சாலை உச்சக்கேள்விதாரர் திரு A.முரளிதரன் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 29, 08.07.2011ல் மிகவும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்டுள்ளதால் மறுஏலம் நடத்த மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

எனவே மறுஏலம் நடத்த மாமன்றத்திற்கு அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் ந.க. எண். 255/2011 A1 (மே)

### <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 47 நாள் 10.08.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 29 நாள் 08.07.2011 ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாக கடைகளுக்கு 23.06.2011 அன்று பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. உச்சக் கேள்விதாரருக்கு கடை ஒப்படைதல் மற்றும் ஏலம் கோரப்படாத கடைகளுக்கு மறு மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி - கோர வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் - தொடர்பாக.

------------

கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - ரங்கே கவுடர் வீதி நவீன வணிகவளாக கடைகளுக்கு 23.06.2011 அன்று பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. இதில் கீழ்க்கண்ட கடைக்கு எதிரே குறிப்பிட்டுள்ள உயர்ந்தபட்ச மாத உரிமம் தொகை மின் ஏலம் மூலம் பெறப்பட்டுள்ளது.

**பிளாக் II கடைகள்**

| வ.எண். | கடை எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாத உரிம மதிப்பு | மாதாந்திர உரிம கட்டணம் உச்ச கேள்வி தொடர்பாக | | உயர்ந்தபட்ச மின் ஏலத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப்-புள்ளி தொகை ரூ. | |
| 1 | 37 | P.கண்ணன் | 3500 | 4200 | - | 4200 |
| 2 | 37 | T.செல்வம் | 3500 | - | - | - |

எனவே கடை எண். 37-க்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மதிப்பைக்காட்டிலும் உயர்ந்தபட்ச கேள்வி மின் ஏலத் தொகை பெறப்பட்டுள்ளதால் மேற்கண்ட கடையை உயர்ந்த பட்ச உச்சக் கேள்விதாரருக்கு ஒப்படைப்பு செய்யலாம். மேலும் கடை எண்.20, 21, 22-ஐ விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்டிருப்பதால் மூன்று கடைகளை தவிர்த்து மீதமுள்ள பிளாக் எண்.I-ல் கடை எண். 1, 4, 5, 6, 7, 9, 11, 12, 13, 14 மற்றும் 18 ஆகிய கடைகள் மற்றும் பிளாக் எண்.II-ல் கடை எண்கள். 19, 23, 29, 31, 32, 38, 39, 40, 41, 42, 43 மற்றும் 44 ஆகிய கடைகளையும் மறு ஏலத்திற்கு விடவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 28 நாள் 08-07-2011 –ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 9451/09/ அ1 (மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 48 நாள் 10.08.2011</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 28 நாள் 08.07.2011 ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு.30-ல் உள்ள ஆம்னி பேருந்து நிறுத்தம் ராதாகிருஷ்ணா சாலையில் அமைந்துள்ள 58.55 ச.மீ (630 அடி) தங்கும் அறை- அரசு கம்பிவட தொலைக்காட்சி கழகம், சென்னை – ஒதுக்கீடு செய்து – தொடர்பாக

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு.30-ல் உள்ள ஆம்னி பேருந்து நிறுத்தம் ராதாகிருஷ்ணா சாலையில் அமைந்துள்ள 58.55 ச.மீ (630 ச.அடி) தங்கும் அறையினை அலுவலக உபயோகத்திற்காக ஒதுக்கீடு செய்து தரும்படி அரசு கம்பிவட தொலைக்காட்சி கழகம், சென்னை அவர்கள் 09.07.2011-ல் கேட்டுள்ளார்.

உதவி நிர்வாக பொறியாளர் தனது 14.07.2011-ம் தேதிய குறிப்பில், பொதுப்பணித்துறை அரசு வழிகாட்டி மதிப்பில் மாதவாடகை ஒரு சதுரடிக்கு ரூ.22.96 எனவும் அதன் அடிப்படையில் 630 சதுரடி X ரூ.22.96 = ரூ.14,466/- என மாதவாடகை நிர்ணயம் செய்து குறிப்பளித்துள்ளார்.

மேற்படி கட்டிடத்தினை அரசு கம்பிவட தொலைக்காட்சி கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யவும் பொதுப்பணித்துறை அரசு வழிகாட்டி மதிப்பின்படி மாதவாடகை ரூ.14,466/-என நிர்ணயம் செய்யவும் அவசர அவசியத்தை முன்னிட்டு வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் முன் அனுமதி பெற்று மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.06335/11/அ8(வ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 49 நாள் 10.08.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் -2011-2014ம் ஆண்டிற்கான உரிமம் இனங்களுக்கு “மின்ஏலம்” (e-auction) மற்றும் ஒப்பந்தப்புள்ளி 02.06.2011-ம் தேதி கோரியது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்தல் - தொடர்பாக

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட 2011 - 2014ம் ஆண்டிற்கான “மின் ஏலம் ” (e-auction) மற்றும் ஒப்பந்தப்புள்ளி 02.06.2011 அன்று நடைபெற்றதில் கீழ்கண்டவாறு ஏலதாரர்கள் கலந்து கொண்டு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

| வ. எண் . | ஏல இனங்கள் | சென்ற ஆண்டு ஏலத் தொகை 2009-2010 ரூ. | மூன்றாண்டு சராசரி தொகை ரூ. | அரசு வழிக்காட்டி மதிப்பாக நிர்ணயம் செய்த தொகை ரூ. | தற்போதைய உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்த தொகை ரூ. | உயர்ந்தபட்ச ஏலதாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சிவானந்தா காலனி, பேருந்து நிலையம் அருகில் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | இல்லை | இல்லை | 1,10,000/- | **36,500/** (ஒப்பந்தப்புள்ளி – ஒரு வருடத்திற்கு) | C.R..விநாயகம் |
| 2 | **<u>தினசரி மார்க்கெட் கடைகள்</u>** 1.சீனிவாசபுரம் தினசரி மாாக்கெட் காய்கறி கடைகள் (9 கடைகள்) 28,29,30,31,32,46,47, 49 மற்றும் 95. | --- | --- | **ரூ.27/-** கடை ஒன்றுக்கு- தினசரி வாடகை (மாத வாடகை அடிப்படை யில்) | **ரூ11.85** கடை ஒன்றுக்கு- தினசரி வாடகை (ஒப்பந்தப்புள்ளி **ரூ.360**/- மாத வாடகை அடிப் படையில்) | M.ராஜ்குமார் |
| 3 | சீனிவாசபுரம் மாநகராட்சி திருமணமண்டபம் | --- | --- | **ரூ.4,00,000/-** | **ரூ.4.75,000/-** | T.ராகவலிஙகம் |

**<u>வரிசை எண் 1-க்கு</u>** இனம் சிவானந்தா காலனி, பேருந்து நிலையம் அருகில் நவீன கட்டண கழிப்பிடத்தில் ஆண்களுக்கான இரண்டு கழிப்பிட அறைகள் மற்றும் நான்கு சிறுநீர் கழிப்பிடங்களும், பெண்களுக்கான இரண்டு கழிப்பிட அறைகளும் உள்ளன. இந்த இனத்திற்கு ரூ.1,10,000/- உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி C.R..விநாயகம் அவர்களிடமிருந்து **2009-2010 -ம்** வருடத்திற்கு பெறப்பட்டது.

மேற்காண் இனத்திற்கு 31.01.2011, 09.02.2011 மற்றும் 17.02.11 நடைபெற்ற மின் ஏலங்களில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. அக்கால கட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்தால் ஏலம் நடத்த இயலாது என்பதனால் மாமன்ற அனுமதியுடன் (மா.ம.தீ.எண்.271, நாள் 28.02.2011) துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டது.

02.06.2011 அன்று நடைபெற்ற மின் ஏலத்தில் இருவர் கலந்து கொண்டார்கள். அதில் திரு.C.R. விநாயகம் என்பவர் ரூ.36,500/- என ஒருவருடத்திற்கு உயர்ந்த பட்சம் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

ஏப்ரல் 2011 மற்றும் மே 2011 மாதங்களில் துறை மூலம் வசூல் பணி மேற்கொண்டதில் நாள் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் ஒருமாதத்திற்கு சராசரியாக ரூ.3000/-தான் வசூல் பெறப்பட்டுள்ளது.

கழிப்பிடத்தில் வசூல் பணி மற்றும் சுத்தம் செய்வதற்கு இரண்டு மாநகராட்சி பணியாளர்கள் அமர்த்தப்பட்டு பராமாரிக்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய சம்பளம் மாதம் மற்றும் பராமாரிப்பு செலவினத்தை கணக்கிட்டால் மாதம் ரூ.15000/-க்கும் மேல் செலவினம் வருகிறது.

இந்நிலையில் கடந்த ஆண்டைவிட மிகக்குறைந்த தொகைக்கு ரூ.36,500/- ஒருவருடத்திற்கு என உயா்ந்த பட்சம் ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டிருப்பினும், மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினத்தை கருத்தில்கொண்டு சிவானந்தா காலனி, பேருந்து நிலையம் அருகில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தை திரு.C.R. விநாயகம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

**வரிசை எண் 2-க்கு** இனம் சீனிவாசபுரம் தினசரி மாா்க்கெட் காய்கறி கடைகள் (9கடைகள்) கடை எண்.28, 29, 30, 31, 32, 46, 47, 49 மற்றும் 95-க்கு அரசு வழிக்காட்டி மதிப்பு **ரூ.27/-** தொகையினைக் காட்டிலும் குறைவாக **ரூ.11.85** ஏலம்/ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. ஆகவே இந்த இனத்திற்கு மறு மின் ஏலம் கோரலாம்.

**வரிசை எண் 3-க்கு** இனம் சீனிவாசபுரம் மாநகராட்சி திருமண மண்டபத்திற்கு சென்ற ஆண்டு துறை மூலம் வசூல் செய்த தொகை ரூ.3,10,000/- ஆகும், அரசு வழிக்காட்டி மதிப்பு தொகை ரூ.4,00,000/-ஐ காட்டிலும் ரூ.75,000/- கூடுதலாக ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி (ரூ.4,75,000/-) பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி ஏல இனங்களில் **வரிசை எண். 1, 3-ஐ** (சிவானந்தா காலனி, பேருந்து நிலையம் அருகில் நவீன கட்டண கழிப்பிடம் மற்றும், சீனிவாசபுரம் மாநகராட்சி திருமண மண்டபம்) உயா்ந்தபட்ச கேள்விதாரா்களுக்கு ஒப்படைப்பு செய்வது தொடா்பாகவும் மற்றும் **வரிசை எண்.2** இனத்தை (சீனிவாசபுரம் தினசரி மாாக்கெட் காய்கறி கடைகள் (9கடைகள்)) மறு ஏலம் கோரவும் அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டத்தில் 08.07.2011-ம் தேதிய தீா்மான எண்.13-ல் ஒப்புதல் அளித்து தீா்மானித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு பொருள் ஒப்புதலுக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க. எண்.12974/2009/B1(அ7)(வ)

ந.க. எண்.11980/2010/அ7(வ) ந.க. எண்.13081/2003/அ4(வ)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 50 நாள் 10.08.2011</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானம் எண் 13 நாள் 08.07.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

பொருள் - கோயம்புத்தூா் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வாா்டு 30-ல் உள்ள குத்தகை இனம், புல் மாா்க்கெட்டில் காய்கறி கமிஷன் மண்டி ஏழு கடைகள் பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - தொடா்பாக.

--------

கோயம்புத்தூா் மாநகராட்சி வடக்கு மண்டலம் வாா்டு எண்.30-ல் உள்ள குத்தகை இனம், புல் மாா்க்கெட்டில் காய்கறி கமிஷன் மண்டி கடைகள் ஏழு உள்ளதை மாநகராட்சிக்கு வருவாய் சோ்க்கும்படி பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது குறித்து அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 08.07.2011-ம் தேதிய தீா்மான எண்.26-ல் ஒப்புதல் அளித்து தீா்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.5724 /2011/அ8(வ)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 51 நாள் 10.08.2011</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானம் எண் 26 நாள் 08.07.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

**பொருள்:** கோயம்புத்தூா் மாநகராட்சி – வடக்கு மண்டலம் -2011-2014ம் ஆண்டிற்கான உரிமம் இனங்களுக்கு ‘‘மின்ஏலம்’’ (e-auction) மற்றும் ஒப்பந்தப்புள்ளி 23.06.2011-ம் தேதி கோரியது – உயா்ந்தபட்ச கேள்விதாரா்களுக்கு ஒப்படைப்பு செய்தல் - தொடா்பாக

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட 2011 - 2014ம் ஆண்டிற்கான “மின் ஏலம் ” (e-auction) மற்றும் ஒப்பந்தப்புள்ளி 23.06.2011 அன்று நடைபெற்றதில் கீழ்கண்டவாறு ஏலதாரா்கள் கலந்து கொண்டு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

| வ. எ ண். | ஏல இனங்கள் | சென்ற ஆண்டு ஏலத் தொகை 2010-2011 ரூ. | மூன்றா ண்டு சராசரி தொகை ரூ. | அரசு வழிக்காட்டி மதிப்பாக நிர்ணயம் செய்த தொகை ரூ. | தற்போதைய உயா்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்த தொகை ரூ. | உயா்ந்தபட்ச ஏலதாரா் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சத்தி ரோடு ஆம்னி பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 4,82,000 | 3,58,000 | 3,60,000/- | 4,04,040/ (ஒரு வருடத்திற்கு) | A.வெங்கடேஷ் |
| 2 | **<u>தினசரி மார்க்கெட் கடைகள்</u>** 1.சீனிவாசபுரம் தினசரி மாாக்கெட் காய்கறி கடைகள் (9 கடைகள்) 28,29,30,31,32,46,47,49 மற்றும் 95. | --- | --- | ரூ.27/- கடை ஒன்றுக்கு- தினசரி வாடகை (மாத வாடகை அடிப்படை யில்) | ரூ25.00 கடை ஒன்றுக்கு- தினசரி வாடகை (ஒப்பந்தப் புள்ளி மாத வாடகை அடிப்படையில்) | R.நாராயணன் |
| 3 | சீனிவாசபுரம் லஜபதிராய் சாலையில் உள்ள வணிக வளாக கடை எண்.1 | --- | --- | ரூ.3,500/- | ரூ.7,569/- (ஒப்பந்தப் புள்ளி மாத வாடகை ) | V.மணிவண்ணன் |

**<u>வரிசை எண் 1-க்கு இனம்</u> -** சத்திரோடு, ஆம்னி பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு A.வெங்கடேஷ் என்பவரால் உச்ச கேள்வியாக ஒரு வருடத்திற்கு ரூ.4,04,040/- கோரப்பட்டுள்ளது. இந்த தொகை அரசு வழிக்காட்டி மதிப்பு தொகை ரூ.3,60,000/-ஐ காட்டிலும் ரூ.44,040/- கூடுதலாக ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி (ரூ.4,04,040/-) பெறப்பட்டுள்ளது.

**<u>வரிசை எண் 2-க்கு இனம்</u>** - சீனிவாசபுரம் தினசரி மாாக்கெட் காய்கறி கடைகள் (9கடைகள்) கடை எண்.28, 29, 30, 31, 32, 46, 47, 49 மற்றும் 95-க்கு திரு.R.நாராயணன் என்பவரால் உச்ச கேள்வியாக ஒரு நாளுக்கு ரூ.25/- கோரப்பட்டுள்ளது. அரசு வழிக்காட்டி மதிப்பு **ரூ.27/-** தொகையினைக் காட்டிலும் குறைவாக **ரூ.2/-** ஏலம்/ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட 9 கடைகள் கடந்த மூன்று ஆண்டுகளாக ஏலம் போகாமல் உள்ளது. எனவே மாநகராட்சி வருவாய் இழப்பினை தவிா்க்கும்பொருட்டு நாள் ஒன்றுக்கு ஒரு கடைக்கு வாடகை ரூ.25/-வீதம் மாதவாடகை அடிப்படையில் திரு.R.நாராயணன் என்பவருக்கு ஒப்படை செய்வது குறித்து மன்றத்திற்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

**<u>வரிசை எண் 3-க்கு இனம்</u>** சீனிவாசபுரம் லஜபதிராய் சாலையில் உள்ள வணிக வளாக கடை எண்.1க்கு V.மணிவண்ணன் என்பவரால் உச்ச ஒப்பந்தப்புள்ளியாக ஒரு மாத வாடகையாக ரூ.7,569/- பெறபட்டுள்ளது. இந்த தொகை அரசு வழிக்காட்டி மதிப்பு தொகை ரூ.3,500/-ஐ காட்டிலும் ரூ.4,069/- கூடுதலாக ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி (ரூ.7,569/-) பெறப்பட்டுள்ளது.

மேற்படி உயா்ந்தபட்ச கேள்விதாரா்களுக்கு ஒப்படைப்பு செய்வது தொடா்பாக அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டத்தில் 08.07.2011-ம் தேதிய தீா்மான எண்.14-ல் வரிசை எண்.1 மற்றும் 3யை உயா்ந்த பட்ச கேள்வித் தொகை ஏற்று ஒப்படை செய்யவும் வரிசை எண்.2யை மறு ஏலம் கோர பரிந்துரை செய்தும் தீா்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு: -**

**வரிசை எண். 1 மற்றும் 3-ஐ** உயா்ந்தபட்ச கேள்விதாரா்களுக்கு ஒப்படைசெய்யலாம்.

**வரிசை எண். 2** மறு ஏலம் கோர (வ.வி.ம.நி.கு.) பரிந்துரை செய்ததை மன்றத்தின் அனுமதிக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

ந.க. எண்.12974/2009/B1(அ7)(வ) ந.க. எண்.11980/2010/அ7(வ) ந.க. எண்.4798/2011/அ8(வ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 52 நாள் 10.08.2011</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 14 நாள் 08.07.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு.33-ல் சிவானந்தா காலனி – அறிவியல் பூங்கா - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படை செய்யவும் மற்றும் கட்டணம் நிர்ணயம் செய்வது - தொடர்பாக.

------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்குமண்டலம் வார்டு எண்.33-க்கு உட்பட்ட பகுதிகளில் சிவானந்தா காலனி டாடாபாத் நடுநிலைப்பள்ளி அருகில் புதியதாக உருவாக்கப்பட்ட 1542.79 சதுர மீட்டர் பரப்பு கொண்ட அறிவியல் பூங்கா நிறுவப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

இப்பூங்காவில் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் விதத்திலும் அறிவியல் சிந்தனையை தூண்டும் விதத்திலும் பல்வேறு அறிவியல் கண்டுபிடிப்புகளின் மாதிரிகள் அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவிற்கு பார்வையாளர்களாக வரும் மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கட்டணம் நிர்ணயம் செய்யப்படவேண்டியுள்ளது. தற்போது தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வ.உ.சி. பூங்காவில் கீழ்கண்ட விகித்தில் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

1 சிறியவர் - ரூ.2.00/-

2 பெரியவர் -ரூ.3.00/-

பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் அறிவியல் பூங்காவை பார்வையிட, தெற்கு மண்டலத்தில் உள்ள வ.உ.சி. உயிரியல் பூங்காவிற்கு நிர்ணயம் செய்துள்ளபடி நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்யலாம். கீழ்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்யலாம்.

1 சிறியவர் ( 3 முதல் 10 வயது வரை) - ரூ.3.00/-
2. பெரியவர் (10 வயதுக்கு மேல்) - ரூ.5.00/-
3. பள்ளிக் குழந்தைகள் (குழுவாக ஆசிரியர்களால் அழைத்துவரும்பொழுது) - ரூ. 2.00

பொது ஏலம் மூலமாக ஒப்படைசெய்யும் வரை துறை மூலம் கட்டணம் வசூல் செய்யவும் அவசர அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் முன்அனுமதி பெற்று மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.05980/11/அ8(வ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 53 நாள் 10.08.2011</u>**

1. அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

2. பொது ஏலம் முறையில் சுய உதவிக்குழுக்கள் மட்டும் ஏலத்தில் பங்கேற்கும் வண்ணம் நிபந்தனை விதித்து ஏலம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - உக்கடம் பேருந்து நிலையத்தில் புத்தக பிரிவு துவக்குதல் - இடம் ஒதுக்கீடு செய்தல் - தொடர்பாக.

பார்வை - 1) தி /ள். பாரதி புத்தகாலயம் அவர்களின் விண்ணப்பம் நாள் 26.07.2011
2) ந.நி.ம.கு.வ. துறை அரசாணை (உப) எண். 120 நாள் 10.07.2007

---------------

கோவை மாநகராட்சி உக்கடம் பேருந்து நிலையத்தில் புத்தகப் பிரிவை துவக்க இடம் ஒதுக்கீடு செய்து தருமாறு கோரி, பார்வை 1-ல் கண்ட விண்ணப்பத்தில் தி/ள். பாரதி புத்தகாலயம் நிறுவனத்தார் விண்ணப்பித்துள்ளனர்.

பார்வை 2-ல் கண்ட அரசாணையில் நகர்புர உள்ளாட்சி அமைப்புகளின் பேருந்து நிலையங்களில் தமிழ் நூல் விற்பனைக்கு இரு பெட்டிக்கடைகள் ஒதுக்கீடு செய்யலாம் எனவும், அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் கடைகளுக்கு மாத வாடகையாக ரூ. 200/- அல்லது அப்பகுதியில் நிலவும் உயர்ந்த குத்தகைத் தொகையின் நான்கில் ஒரு பங்கு, இவற்றில் எது குறைவோ அதனை பொது ஏலம் தவிர்த்து நிர்ணயம் செய்யலாம் எனவும், விநியோகஸ்தர்கள் /நூல் வெளியீட்டாளர்கள் ஆகியோர்களுக்கு முன்னுரிமை அளிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்கடம் பேருந்து நிலையத்தில் ஏற்கனவே ஒரு நூலக விற்பனை மையம் மாநகராட்சி அனுமதியுடன் செயல்பட்டு வருகிறது.

எனவே மேற்படி தி/ள். பாரதி புத்தகாலயம் நிறுவனத்தாருக்கு கடை அமைக்க இடம் ஒதுக்கீடு செய்வது குறித்து முடிவு செய்ய மாமன்ற ஒப்புதல் கோரி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.4955/11/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 54 நாள் 10.08.2011**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

பார்வை: வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.20 நாள்.08.07.2011.

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனங்களுக்கு கடந்த **23.06.2011** –ல் பொது மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது இதில் கீழ்கண்ட இனங்களுக்கு ஏலதாரர்கள் அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு ஏலத் தொகை கோரியுள்ளார்.

| வ. எண் | இனம் | ஏலதாரர் பெயர்கள் | அரசாங்க மதிப்பு ரூ. (Base Value) | ஏலத்தொகை (ரூபாய்) வருடம் ஒன்றிற்கு | மின்ஏலம் / ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | நேரு ஸ்டேடியம் இருசக்கர வாகன நிறுத்தும்மிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | சுந்தரேஸ்வரி | 2,00,000/– | 1.20,000/– | ஒப்பந்தப்புள்ளி |
| 2 | அவினாசி ரோடு மாநகராட்சி வணிக வளாகத்தில் பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு வரும் வாகனங்களுக்கு நிறுத்தும் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | ரமேஷ்<br>கலீல் ரஹ்மான்<br>அப்பாஸ் | 1,32,000/– | 52,000/–<br>45,000/–<br>51,000/– | ஒப்பந்தப்புள்ளி<br>ஒப்பந்தப்புள்ளி<br>ஒப்பந்தப்புள்ளி |
| 3 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் தொலைக்காட்சி மூலம் விளம்பரம் செய்யும் உரிமம் | வேலுச்சாமி<br>சரவணன்<br>மணிவண்ணன் | 2,55,000/– | 2,22,000/–<br>3,16,000/–<br>3,60,999/– | ஒப்பந்தப்புள்ளி<br>ஒப்பந்தப்புள்ளி<br>ஒப்பந்தப்புள்ளி |
| 4 | வ.உ.சி.பூங்கா சிறுவர் ரயில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | கிருஷ்ணன்<br>ராஜ்குமார் | 4,67,000/– | 2,16,000 /–<br>2,06,000/– | ஒப்பந்தப்புள்ளி<br>ஒப்பந்தப்புள்ளி |
| 5 | வ.உ.சி.பூங்கா மிருகக் காட்சி சாலை நுழைவுக் கட்டணம் மற்றும் சிறுவர் விளையாட்டு பூங்காவில் நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | அப்பாஸ்<br>செந்தில்குமார்<br>மணிவண்ணன்<br>எல்.என்.சையத் இப்ராஹீம் | 36,76,000/ | 16,60,666/–<br>21,04,000/–<br>17,01,000/–<br>15,15,151/– | ஒப்பந்தப்புள்ளி<br>ஒப்பந்தப்புள்ளி<br>ஒப்பந்தப்புள்ளி<br>ஒப்பந்தப்புள்ளி |

மேற்படி குத்தகை இனங்களுக்கு நடைபெற்ற மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வரிசை எண். **3–**க்கு மட்டுமே அரசாங்க மதிப்பைவிட கூடுதலாக பெறப்பட்டுள்ளது. ஏனைய இனங்களுக்கு அரசாங்க மதிப்பைவிட குறைவாக பெறப்பட்டுள்ளது.

எனவே அரசாங்க மதிப்பை விட கூடுதலாக பெறப்பட்டுள்ள வரிசை எண். 3–ல் கண்ட இனத்தினை உயர்ந்தபட்ச ஏல தொகை கோரியுள்ள ஏலதாரர் திரு. மணிவண்ணனுக்கு ஒப்படை செய்யலாம். மற்ற இனங்களுக்கு மறு ஏலம் கோரலாம் என வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைத்ததில் அக்குழு பார்வையில் கண்ட தீர்மானத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். **9659/2010/அ1)**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 55 நாள் 10.08.2011**

1.அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

2. வரிசை எண் 4ல் உள்ள இனம் 4-வது முறையாக ஏலம் கோரப்பட்டுள்ளதால் உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

பார்வை: வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.19 நாள்.08.07.2011.

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட காலியாக உள்ள கடைகளுக்கு கடந்த 23.06.2011 –ல் பொது மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட கடைகளுக்கு ஏலதாரர்கள் அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு ஏலத்தொகை கோரியுள்ளனர்.

1. மத்திய பேருந்து நிலையம் கடைகள் (முதல் தளம்)

| வரிசை எண் | கடை எண் | ஏலதாரர் பெயர்கள் | ஏலத்தொகை (ரூபாய் ) | மின்ஏலம் / ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | 9 | மரிய சின்னப்பன் | 4500 | மின்ஏலம் |
| | | ஆரோக்கிய செல்வராஜ் | 2200 | ஒப்பந்தப்புள்ளி |
| | | மரிய சின்னப்பன் | 2300 | ஒப்பந்தப்புள்ளி |
| | | தமிழ் மணி | 4250 | ஒப்பந்தப்புள்ளி |
| 2 | 10 | மரிய சின்னப்பன் | 4500 | மின்ஏலம் |
| | | கருணாநிதி | 4200 | ஒப்பந்தப்புள்ளி |
| | | மரிய சின்னப்பன் | 2400 | ஒப்பந்தப்புள்ளி |
| | | ஆரோக்கிய செல்வராஜ் | 2100 | ஒப்பந்தப்புள்ளி |
| 3 | 11 | முகமது நிசார் | 4500 | ஒப்பந்தப்புள்ளி |
| | | முத்துராமன் | 4550 | மின்ஏலம் |
| 4 | 12 | அன்னம்மாள் | 4104 | ஒப்பந்தப்புள்ளி |
| 5 | 14 | வேலுசாமி | 4104 | ஒப்பந்தப்புள்ளி |
| 6 | 15 | வேலுசாமி | 4104 | ஒப்பந்தப்புள்ளி |
| 7 | 16 | வேலுசாமி | 4104 | ஒப்பந்தப்புள்ளி |

மேற்படி கடைகளுக்கு அரசாங்க வாடகை மதிப்பாக (Base Value) மாத வாடகையாக ரூபாய் **4000/–** நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில் அனைத்து கடைகளுக்கும் அரசாங்க வாடகை மதிப்பைவிட கூடுதலாக பெறப்பட்டுள்ளது. கடை எண்கள் **9,10, 11–**யை தவிர மீதமுள்ள நான்கு கடைகளுக்கும் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டுள்ளது.

**2. <u>தியாகி குமரன் மார்க்கெட் கடைகள்</u>**

| வரிசை எண் | கடை எண் | ஏலதாரர் பெயர்கள் | அரசாங்க வாடகை மதிப்பு ரூ. | ஏலத் தொகை ரூ. | மின்ஏலம் / ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | NB 28 | கலீல் ரஹ்மான் | 4,000/- | 4100 | மின்ஏலம் |
| | | பி.பாலசுப்ரமணி | 4,000/- | 2250 | ஒப்பந்தப்புள்ளி |
| | | கலீல் ரஹ்மான் | 4,000/- | 1750 | ஒப்பந்தப்புள்ளி |
| 2 | J9 | நிசார் அகமது | 3000/- | 6000 | மின்ஏலம் |
| | | கலீல் ரஹ்மான் | 3000/- | 4550 | ஒப்பந்தப்புள்ளி |
| 3 | NB 27 | கலீல் ரஹ்மான் | 4,000/- | 4100 | மின்ஏலம் |
| | | கலீல் ரஹ்மான் | 4,000/- | 2250 | ஒப்பந்தப்புள்ளி |
| | | அப்பாஸ் | 4,000/- | 1550 | ஒப்பந்தப்புள்ளி |
| 4 | NB 11 | பாலசுப்ரமணி | 7700/- | 13000 | ஒப்பந்தப்புள்ளி |
| | | முகம்மது ஷா | 7700/- | 16200 | மின்ஏலம் |
| | | வி. முருகனாந்தம் | 7700/- | 3500 | ஒப்பந்தப்புள்ளி |
| | | கலீல் ரஹ்மான் | 7700/- | 4775 | ஒப்பந்தப்புள்ளி |
| | | அன்வர் பாஷா | 7700/- | 15530 | ஒப்பந்தப்புள்ளி |
| 5 | NB 10 | கோபால கிருஷ்ணன் | 7700/- | 17995 | மின்ஏலம் |
| | | அன்வர் பாஷா | 7700/- | 13330 | ஒப்பந்தப்புள்ளி |
| | | கே.எ.அபுதாஹீர் | 7700/- | 8100 | ஒப்பந்தப்புள்ளி |
| | | அஸ்கத் அலி | 7700/- | 15500 | ஒப்பந்தப்புள்ளி |
| 6 | NB 09 | முகம்மது இலியாஸ் | 7700/- | 15100 | ஒப்பந்தப்புள்ளி |
| | | அபுதாஹீர் | 7700/- | 7200 | ஒப்பந்தப்புள்ளி |
| | | அப்துல் சத்தார் | 7700/- | 7101 | ஒப்பந்தப்புள்ளி |
| | | அப்துல் கரீம் | 7700/- | 12600 | ஒப்பந்தப்புள்ளி |
| 7 | NB 04 | முகம்மது உசேன் | 7700/- | 17155 | மின்ஏலம் |
| | | வி.மனோகரன் | 7700/- | 400 | ஒப்பந்தப்புள்ளி |
| | | பழனிசாமி | 7700/- | 4500 | ஒப்பந்தப்புள்ளி |
| | | தங்கராஜ் | 7700/- | 5000 | ஒப்பந்தப்புள்ளி |
| | | டி.குமார் | 7700/- | 10101 | ஒப்பந்தப்புள்ளி |
| 8 | P - 186 | அப்பாஸ் | 6400/- | 9100 | ஒப்பந்தப்புள்ளி |
| | | சிக்கத்தர் பாஷா | 6400/- | 6100 | ஒப்பந்தப்புள்ளி |
| | | காஜா உசேன் | 6400/- | 5500 | ஒப்பந்தப்புள்ளி |
| | | கலீல் ரஹ்மான் | 6400/- | 4200 | ஒப்பந்தப்புள்ளி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | P - 176 | அப்துல் சுக்கூர் | 4000/- | 4050 | மின்ஏலம் |
| 10 | T- 32 | கலீல் ரஹ்மான் | 4000/- | 8800 | ஒப்பந்தப்புள்ளி |
| | | கே.எ.அபுதாஹீர் | 4000/- | 5400 | ஒப்பந்தப்புள்ளி |
| | | அப்துல் கரீம் | 4000/- | 4852 | ஒப்பந்தப்புள்ளி |
| | | காஜா உசேன் | 4000/- | 7500 | ஒப்பந்தப்புள்ளி |

மேற்படி அனைத்து கடைகளுக்கும் கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச மாத வாடகை தொகை அரசாங்க வாடகை மதிப்பைவிட (Base Value) கூடுதலாக பெறப்பட்டுள்ளது. கடை எண். NB-176 தவிர அனைத்து கடைகளுக்கும் ஒன்றுக்கு மேற்ப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. எனவே உயர்ந்தபட்ச மாத வாடகை கோரியுள்ள ஏலதாரர்களுக்கு கடை ஒப்படை செய்யலாம்.

3. <u>உக்கடம் புதிய மீன் மார்க்கெட் கடை</u>

| வரிசை எண் | கடை எண் | ஏலதாரர் பெயர்கள் | அரசாங்க வாடகை மதிப்பு ரூ. | ஏலத்தொகை (ரூபாய் ) | மின்ஏலம் / ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | எல்.என்.சையத் இப்ராஹிம் | 36,300/- | 8000 | ஒப்பந்தப்புள்ளி |
| | | மோகன் ராஜ் | 36,300/- | 4514 | ஒப்பந்தப்புள்ளி |
| 2 | 61 | மன்சூர் அலி | 3000/- | 16335 | மின்ஏலம் |
| | | ஜாகீர் உசேன் | 3000/ | 7100 | ஒப்பந்தப்புள்ளி |
| | | குருநாதன் | 3000/ | 10600 | ஒப்பந்தப்புள்ளி |
| | | மோகன் ராஜ் | 3000/ | 9014 | ஒப்பந்தப்புள்ளி |

மேற்படி கடை எண் –1க்கு அரசாங்க வாடகை மதிப்பு ரூபாய் 36,300/– மற்றும் கடை எண். 61–க்கு 3000/– ஆகும். இதில் கடை எண்.1–க்கு உயர்ந்தட்ச மாத வாடகையாக ரூ.8000/– மட்டுமே கோரப்பட்டுள்ளது. எனவே மேற்படி கடைக்கு மறுஏலம் கோரலாம். கடை எண்.61–க்கு உயர்ந்தப்பட்ச மாத வாடகையாக ரூ.16335/– கோராப்பட்டுள்ளது. எனவே மேற்படி கடையினை உயர்ந்தபட்ச வாடகை கோரியுள்ள ஏலதாரருக்கு ஒப்படை செய்யலாம்.

4. நஞ்சப்பா ரோடு வணிக வளாகம் கடை

| வரிசை எண் | கடை எண் | ஏலதாரர் பெயர்கள் | அரசாங்க வாடகை மதிப்பு ரூ. | ஏலத்தொகை (ரூபாய் ) | மின்ஏலம் / ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | 18 | அசோக் பாபு | 10,600/- | 17050 | மின்ஏலம் |
| | | கலீல் ரஹ்மான் | 10,600/- | 12100 | ஒப்பந்தப்புள்ளி |
| | | ஜெ.மனோகரன் | 10,600/- | 13300 | ஒப்பந்தப்புள்ளி |
| | | ராஜ கோபாலன் | 10,600/- | 15000 | ஒப்பந்தப்புள்ளி |

மேற்படி கடைக்கு கிடைக்கப் பெற்றுள்ள உயர்ந்தபட்ச மாத வாடகை தொகை ரூ. 17,050/– அரசாங்க மாத வாடகைவிட கூடுதலாகும். மேலும் மேற்படி கடைக்கு மறு ஏலம் அறிவிக்க கோரி திரு.கலீல் ரஹ்மான் என்பவர் ஏல நிபந்தனையின்படி ஒரு வருட வாடகை தொகை மற்றும் 5 சதவீதம் உயர்வு செய்யப்பட்ட வாடகை தொகையினை செலுத்தியுள்ளார். எனவே மேற்படி கடைக்கு மறு ஏலம் கோரலாம்.

5. <u>காந்திபுரம் நகர பேருந்து நிலையம்</u>

| வரிசை எண் | கடை எண் | ஏலதாரர் பெயர்கள் | அரசாங்க வாடகை மதிப்பு ரூ. | ஏலத்தொகை (ரூபாய்) | மின்ஏலம் / ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | 4 | கமலாவதி | 1,700/- | 17550 | ஒப்பந்தப்புள்ளி |
| | | கோபாலகிருஷ்ணன் | 1,700/- | 16500 | ஒப்பந்தப்புள்ளி |
| | | சலீம் | 1,700/- | 7501 | ஒப்பந்தப்புள்ளி |
| | | ஹரிகிருஷ்ணன் | 1,700/- | 12555 | ஒப்பந்தப்புள்ளி |
| | | குமார் | 1,700/- | 9000 | ஒப்பந்தப்புள்ளி |
| | | ராகவலிங்கம் | 1,700/- | 11700 | ஒப்பந்தப்புள்ளி |
| | | அமீர்தலிங்கம் | 1,700/- | 15001 | ஒப்பந்தப்புள்ளி |
| | | நாராயணன் | 1,700/- | 13500 | ஒப்பந்தப்புள்ளி |

மேற்படி கடைக்கு கிடைக்கப் பெற்றுள்ள உயர்ந்தபட்ச மாத வாடகை தொகை ரூ. **17,550/–** அரசாங்க மாத வாடகைவிட கூடுதலாகும். மேலும் மேற்படி கடைக்கு மறு ஏலம் அறிவிக்க கோரி திரு.கோபால கிருஷ்ணன் என்பவர் ஏல நிபந்தனையின்படி ஒரு வருட வாடகை தொகை மற்றும் **5** சதவீதம் உயர்வு செய்யப்பட்ட வாடகை தொகையினை செலுத்தியுள்ளார். எனவே மேற்படி கடைக்கு மறு ஏலம் கோரலாம்.

மேற்படி மேலும் மேற்படி கடைக்கு திரு.கலீல் ரஹ்மான் என்பவர் மின் ஏலத்தில் மாதவாடகையாக ரூ.**8,30,000/–** கோரினார். மேலும் அவர் ஒப்பந்தப்புள்ளி திறப்பின் போது கலந்துக் கொண்டு விண்ணப்பம் ஒன்று அளித்துள்ளார். அதில் சிங்கநால்லூர் பேருந்து நிலையத்தில் உள்ள மாநகராட்சி கட்டண கழிப்பிடத்திற்கு மின் ஏலம் அளிப்பதற்கு பதிலாக மேற்படி நகர பேருந்து நிலைய கடை எண்.**4–**க்கு தவறுதலாக ரூ. **8,30,000/–** பதிவு செய்து விட்டதாக தெரிவித்து தான் செலுத்திய ஏல தொகையினை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார். ஏல நிபந்தனையின்படி மேற்படியார் செலுத்திய ஏல வைப்புத் தொகை ரூ.**1,00,000/–**ஐ பறிமுதல் செய்யலாம் என வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைத்ததில் பார்வையில் கண்ட வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தில் கீழ்க்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வரிசை எண்.1 | மத்திய பேரூந்து நிலையம் கடைகள் 9,10,11-யை ஒப்படை செய்து மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது. கடை எண்.12, 14, 15, மற்றும் 16-க்கு மறு ஏலம் கோர தீர்மானிக்கப்பட்டது. |
| வரிசை எண்.2 | தியாகி குமரன் மார்கெட் கடைகள் எண்.-176 தவிர மற்ற கடைகளுக்கு ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப் பட்டது. |
| வரிசை எண்.3 | உக்கடம் புதிய மீன் மார்க்கெட் கடை எண்.1-க்கு மறு ஏலம் கோரவும், கடை எண்.61-க்கு உயர்ந்தப்பட்ச கோரிக்கையினை ஏற்று ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப் பட்டது. |
| வரிசை எண்.4 | மறு ஏலம் கோரி மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது. |
| வரிசை எண்.5 | காந்திபுரம் நகர பேரூந்து நிலையம் கடை எண்.4-க்கு உயர்ந்தப்பட்ச மாத வாடகையாக ரூ.17,550/– கோரப்பட்டுள்ளதை ஏற்று கடை ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது. மாநகராட்சி நிர்ணயம் செய்யப்பட்ட தொகைக்கும் கூடுதலாக ஏல கோரிக்கை பெறப்பட்டுள்ளது. இருப்பினும், காலதாமதம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக மறுஏலம் கோரப்பட்டுள்ளது. எனவே அந்த கோரிக்கையினை நிராகரிக்கத் தீர்மானிக்கப் பட்டது. |

மேலும் காந்திபுரம் நகர பேரூந்து நிலையம் மின் ஏலத்திற்கு தவறுதலாக ரூ.8,30,000/- பதிவு செய்த ஏலதாரருக்கு ரூ.10,000/- அபராதம் விதிக்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப் பட்டுள்ளது. எனவே இது குறித்து மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: வரிசை எண் **1** முதல் **4** வரை அனுமதிக்கலாம். வரிசை எண் **5–**ல் உள்ள இனத்திற்கு மறுஏலம் நடத்தலாம். ந.க.எண். **11956/2010/**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 56 நாள் 10.08.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண் 17

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான பழைய மீன் மார்க்கெட் கடைகள் கடந்த 25 வருடங்களாக செயல்பட்டு வந்தது. இந்த மீன் மார்க்கெட்டில் 189 கடைகள் செயல்பட்டு வந்தன.

மேற்படி மீன் மார்க்கெட்டில் சில கடைகள் சில காலமாக பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் காணப்பட்டன. இந்நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டில் உக்கடம் பைபாஸ் ரோட்டில் புதிய மீன் மார்க்கெட் மாநகராட்சியால் கட்டப்பட்டது. இதில் இருந்த 68 கடைகளுக்கு பொது மின் ஏலம் / ஒப்பந்தபுள்ளி மூலம் மாமன்ற ஒப்புதலுடன் வியாபாரிகளுக்கு ஒப்படை செய்யப்பட்டது.

இதனால் பழைய மீன் மார்க்கெட் கடைகள் மூடப்பட்டது. மேலும் உபயோகிக்க இயலாத நிலையிலும் மிகவும் பழுதடைந்த எந்நேரமும் கீழே விழும் சூழ்நிலையில் இருந்த மேற்படி கடைகள் கடந்த 09.07.2011 அன்று மாநகராட்சியால் இடித்து அப்புறப்படுத்தப்பட்டது. தற்போது மேற்படி இடம் காலியாக உள்ளது.

மேலும் உக்கடம் பகுதி வாகன போக்குவரத்து நிறைந்த இடமாக காணப்படுகிறது. இவ்விடத்தில் உக்கடம் பேருந்து நிலையம் அமையப்பெற்றுள்ளதால் இரு சக்கர வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்திட பொதுமக்களுக்கு வழிவகை இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் மேற்படி உக்கடம் பேருந்து நிலையம் அருகில் ஏற்கனவே ஒரு மாநகராட்சி இரு சக்கர வாகன நிறுத்துமிடம் செயல்பட்டு வந்தது. இதன் மூலம் மாநகராட்சிக்கு நல்ல வருவாய் கிடைத்து வந்தது. மேலும் அவ்விடத்தில் உக்கடம் காவல் நிலையம் கட்டப்பட்டதால் இருசக்கர வாகன நிறுத்துமிடம் மூடப்பட்டது. எனவே தற்போது வெற்றிடமாக உள்ள பழைய மீன் மார்க்கெட் இருந்த இடத்தில் மாநகராட்சி வேறு கட்டிடம் கட்டும் வரையிலான காலத்தில் இருசக்கர வாகன நிறுத்துமிடம் அமைப்பதால் மாநகராட்சிக்கு வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

எனவே மேற்படி இடத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான பிற இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டணம் ( ஒவ்வொரு 6 மணி நேரத்திற்கும் ரூ. 5/- ) மற்றும் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி இருசக்கர வாகன நிறுத்துமிடம் தற்காலிகமாக அமைக்கலாம்.

மேலும் மேற்படி இருசக்கர வாகன நிறுத்துமிடம் பொது மின் ஏலம் / ஒப்பந்தபுள்ளி மூலம் ஒப்பந்ததாரருக்கு ஒப்படை செய்யும் வரை துறை மூலம் நிறுத்தக்கட்டணம் வசூலிக்கலாம். வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பின்னேற்பிற்குட்பட்டு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண். 9659/2010/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 57 நாள் 10.08.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.
41-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு ஜி.டி. இராஜேந்திரன் அவர்களின் ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 18

பொருள் : வணிக வளாக கடைகள் - கோயமுத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் - ராமநாதபுரம் கடை எண். 16 முதல் 21 வரை மற்றும் ராமகிருஷ்ணாபுரம் கடை எண். 4 முதல் 10 வரை உரிம காலம் 31.03.2011-உடன் முடிவடைந்தது - உரிமக் கட்டணம் உயர்வு செய்து உரிமக் காலம் நீட்டிப்பு செய்வது - சம்பந்தமாக

-------

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்காண் வணிக வளாக கடைகளின் நீடிப்பு செய்யப்பட்ட உரிம காலம் 31.03.2011 உடன் முடிவடைந்துள்ளது.

ராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாக கடைகள் - 16 முதல் 21 வரை

ராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி வணிக வளாக கடைகள் - 4 முதல் 10 வரை

மேற்காண் வணிக வளாக கடைகளின் உரிமைதாரர்கள் மற்றும் அனுபோகதாரர்கள் மேற்காண் உரிமை காலம் நீடிப்பு செய்ய கோரியும் மாநகராட்சியால் உயர்வு செய்யும் உரிம கட்டணத் தொகைக்கு சம்மதம் தெரிவித்தும் விண்ணப்பம் செய்துள்ளார்கள்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல், குத்தகை புதுப்பித்தல் குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசாணை (நிலை) எண். 92 நாள் 03.07.2007-ல் திருத்திய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி ராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகம் அமைந்துள்ள பகுதியில் அதிகபட்சமாக சதுரடிக்கு ரூ.19/- வீதமும், ராமகிருஷ்ணாபுரம் பகுதியில் அதிகபட்சமாக சதுரடிக்கு ரூ.23/- வீதமும் வசூலிக்கப்பட்டு வருவதாக வெளியிடப் பணியாளர்களின் அறிக்கை பெறப்பட்டுள்ளது.

ராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 16 முதல் 21 மற்றும் ராமகிருஷ்ணா மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 4 முதல் 10 ஆகிய கடைகளின் உரிமதாரர்கள் உரிம நீட்டிப்பு தொகை ரூ.1,000/- வீதம் செலுத்தி உரிம நீட்டிப்பு கோரியுள்ளனர். எனவே, அரசாணையின்படி தற்போதைய உரிமக் கட்டணத் தொகையில் குறைந்தபட்சம் 15% சதவீதத் தொகை மற்றும் சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டால் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

| கடை ண். | உரிமதாரர் பெயர் | உரிமம் புதுப்பிக்க செலுத்திய கட்டணம் | தற்போதைய மாதாந்திர உரிமக் கட்டணம் | 15% உயர்வு செய்யப் பட்டால் பெறப்படும் உரிமக் கட்டணம் | சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டால் பெறப்படும் உரிம கட்டணம் |
|---|---|---|---|---|---|
| ராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகம் (210 சதுரடி பரப்பளவு) சந்தை மதிப்பு சதுரடி ஒன்றுக்கு ரூ.19/– | | | | | |
| 16. | திரு செந்தில்குமார் | ரூ. 1,000/– | ரூ. 3,480/– | ரூ. 4,002/– | 3,990/– |
| 17. | திரு சி.வி.சேஷாத்திரி | ரூ. 1,000/– | ரூ. 3,480/ | ரூ. 4,002/ | 3,990/ |
| 18. | திரு ரவீந்தர்ராஜ் | ரூ. 1,000/– | ரூ. 3,480/ | ரூ. 4,002/ | 3,990/ |
| 19. | திரு சாமியப்பன் | ரூ. 1,000/– | ரூ. 3,940/ | ரூ. 4,531/ | 3,990/ |
| 20. | திரு முகமது இஸ்மாயில் | ரூ. 1,000/– | ரூ. 4,635/ | ரூ. 5,331/ | 3,990/ |
| 21. | திரு ஹபீப் ரஹ்மான் | ரூ. 1,000/– | ரூ. 3,480/ | ரூ. 4,002/ | 3,990/ |
| ராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி வணிக வளாகம் (100 சதுரடி பரப்பளவு) சந்தை மதிப்பு சதுரடி ஒன்றுக்கு ரூ.23/– | | | | | |
| 4 | திரு வேலாயுதம் | ரூ. 1,000/– | ரூ. 3,020/– | ரூ. 3,473/– | 2,300/ |
| 5 | திருமதி க. சரசுவதி | ரூ. 1,000/– | ரூ. 3,020/– | ரூ. 3,473/ | 2,300/ |
| 6 | திருமதி வசந்தகுமாரி | ரூ. 1,000/– | ரூ. 2,900/– | ரூ. 3,335/ | 2,300/ |
| 7 | திரு முகமது சர்புதீன் | ரூ. 1,000/– | ரூ. 2,900/– | ரூ. 3,335/ | 2,300/ |
| 8 | திரு பாதாள முத்து நாடார் | ரூ. 1,000/– | ரூ. 2,960/ | ரூ. 3,404/ | 2,300/ |
| 9 | திரு பாதாள முத்து நாடார் | ரூ. 1,000/– | ரூ. 2,980/ | ரூ. 3,427/ | 2,300/ |
| 10 | திரு குமாரவேல் | ரூ. 1,000/– | ரூ. 3,040/ | ரூ. 3,496/ | 2,300/– |

எனவே, அரசாணையின்படி, மேற்காண் கடைகளுக்கு மாதாந்திர உரிமக் கட்டணம் சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுவதை விட தற்போதைய மாதாந்திர உரிமக் கட்டணத்தில் 15 சதவீதம் உய்வு செய்யப்படும் தொகை கூடுதலாக வருவதனால், மேற்படி கடைகளுக்கு மாதாந்திர உரிமக் கட்டணம் 15 சதவீதம் உயர்வு செய்து 01.04.2011 முதல் 31.03.2014 முடிய மூன்றாண்டுகளுக்கு உரிம காலம் நீட்டிப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.15, நாள். 08.07.2011-ன் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். எண்.(16109/ 2007/ கிஅ7 ) 03526/ 2011/ கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 58 நாள் 10.08.2011**

பொருளில் ராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண் 8, 9, 10ன் உரிமம்தாரர் இறந்துவிட்டதாக 6 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு எஸ்.எம். சாமி தெரிவித்து, உரிமம் நீட்டிப்பு செய்ய ஆட்சேபனை தெரிவித்தார். இக்கடைகள் குறித்து ஆய்வு செய்து மீண்டும் மாமன்றத்திற்குப் பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி கடைகள் தவிர பிற கடைகளுக்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 15 நாள் 08.07.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண் 19

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 10.06.2011 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 11822/10/ எம்.டி.4 | வார்டு எண்.47 சின்ன எல்லைய சந்து மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் படிப்பக அறை கட்டுதல். | 5.92 | 03-06-2011 இரண்டாம் அழைப்பு | தி/ள் எஸ்.பி. இன்ஜினியர்ஸ். | 3.63 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- வரிசை எண்.1 ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 11822/2010/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 59 நாள் 10.08.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 20

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி- மேற்கு மண்டலம் -பொறியியல் பிரிவு வார்டு எண்.62-க்குட்பட்ட ராமலிங்க நகரில் உள்ள மாநகராட்சி சமுதாய கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்து நூலகத்திற்கு ஒதுக்கீடு செய்தல்- தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண்.62-க்குட்பட்ட ராமலிங்க நகரில் உள்ள மாநகராட்சி இடத்தில் சுமார் 53.76 சதுர மீட்டர் பரப்பளவில் சமுதாயக் கூடம் தற்பொழுது கட்டிமுடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வாடகை அடிப்படையில் விட தயாராக உள்ளது.

இக்கட்டிடத்திற்கு பொதுப்பணித்துறையின் கட்டிட மதிப்பின்படியும், பதிவுத்துறையின் நிலமதிப்பின்படியும் மாதம் ஒன்றுக்கு ரூ.10,758/- வாடகையாக நிர்ணயம் செய்யலாம் என உதவி நிர்வாக பொறியாளர் (மேற்கு) அவர்கள் குறிப்பு கொடுத்துள்ளார்.

மாவட்ட நூலகத்துறையினர் தற்பொழுது வார்டு 62-ல் உள்ள காணக்காள் வீதியில் இயங்கி வரும் நூலகமானது பழுதடைந்த ஒட்டு வில்லை கட்டிடத்தில் உள்ளதால் இந்நூலகத்தை ராமலிங்க நகர் சமுதாய கூடத்தில் நடத்துவதற்கு குறைந்தபட்ச வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்து தருமாறு தங்களது 22.9.2010 தேதிய கடிதத்தில் கேட்டுள்ளனர்.

மேற்கண்டவாறு குறைந்தபட்ச வாடகை நிர்ணயம் செய்து நூலகத்திற்கு ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் மேற்படி கட்டிட திட்ட மதிப்பீட்டுத் தொகை முழுவதும் 10 ஆண்டுக்குள் வசூல் செய்து முடிக்கும் வகையில் வாடகை நிர்ணயம் செய்யலாம் என முடிவு செய்து மாத வாடகையாக ரூ. 1000/- என நிர்ணயம் செய்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 18 நாள் 8.7.11ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

ந.க.எண். 3329 /11/D1(w)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 60 நாள் 10.08.2011</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 18 நாள் 08.07.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 21**

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தில் கீழ்க்கண்ட உள்ளாட்சி அமைப்புகள் அரசாணை (நிலை) எண். 49 ந.நி. (ம) கு.வ. (தேர்தல்) துறை நாள். 22.02.2011 மற்றும் அரசாணை (நிலை) எண். 72 ந.நி. (ம) கு.வ. (தேர்தல்) துறை நாள். 12.05.2011 படி தற்போதுள்ள கோவை மாநகராட்சியில் இணைந்து அடுத்துவரும் சாதாரண தேர்தலுக்குப்பின் இயங்கப்படவுள்ளது.

1. குறிச்சி நகராட்சி
2. குனியமுத்தூர் நகராட்சி‘
3. கவுண்டம்பாளையம் நகராட்சி
4. சரவணம்பட்டி பேரூராட்சி
5. காளப்பட்டி பேரூராட்சி
6. வடவள்ளி பேரூராட்சி
7. துடியலூர் பேரூராட்சி
8. வீரகேரளம் பேரூராட்சி
9. வெள்ளக்கிணர் பேரூராட்சி
10. சின்னவேடம்பட்டி பேரூராட்சி
11. விளாங்குறிச்சி கிராம ஊராட்சி

தற்சமயம் கோவை மாநகராட்சியில் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டம் ரூ. 377.13 கோடி திட்ட மதிப்பில் 583 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள் பதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறன்றது. மாநகரப்பகுதியில் பெறப்படும் கழிவுநீரினை மூன்று இடங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மூலமாக சுத்திகரிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் மாநகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள உள்ளாட்சி அமைப்புகளிலும் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த தமிழக அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகள் (விளாங்குறிச்சி கிராம ஊராட்சி நீங்கலாக) அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக ஆய்வு பணிகள் மேற்கொள்ளவும் விரிவான திட்ட அறிக்கைகளை தயாரிக்கவும், அதற்கான செலவினத் தொகையினை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் வழங்க மன்றங்கள் ஒப்புதல் வழங்கி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதில் கீழ்கண்ட உள்ளாட்சி அமைப்புகள் மட்டும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய ஆய்வு கட்டணத்தை முழுமையாக கீழ்கண்டவாறு செலுத்தியுள்ளது.

1. சரவணம்பட்டி பேரூராட்சி – ரூ. 6.11 இலட்சம்
2. காளப்பட்டி பேரூராட்சி – ரூ. 5.04 இலட்சம்
3. வடவள்ளி பேரூராட்சி – ரூ. 5.14 இலட்சம்
4. துடியலூர் பேரூராட்சி – ரூ. 5.84 இலட்சம்
5. வீரகேரளம் பேரூராட்சி – ரூ. 5.12 இலட்சம்
6. வெள்ளக்கிணர் பேரூராட்சி – ரூ. 5.23 இலட்சம்
7. சின்னவேடம்பட்டி பேரூராட்சி – ரூ. 5.23 இலட்சம்

இது தவிர கீழ்க்கண்ட நகராட்சிகள் அதன் எதிரே குறிப்பிட்டுள்ள தொகையினை செலுத்த அந்தந்த மன்றங்களில் ஒப்புதல் பெற்று தொகையினை செலுத்த அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பியுள்ளதாக தெரியவருகிறது.

1. குறிச்சி நகராட்சி – ரூ. 20.36 இலட்சம்
2. குனியமுத்தூர் நகராட்சி – ரூ. 21.70 இலட்சம்
3. கவுண்டம்பாளையம் நகராட்சி – ரூ. 21.60 இலட்சம்

இது தவிர விளாங்குறிச்சி கிராம ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில் கோவை மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டத்தில் மாநகராட்சி எல்லைக்குள் விடுபட்ட பகுதிகள் மற்றும் விஸ்திரிப்பு பகுதிகளில் கணக்கிடப்பட்டுள்ள 125 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள் கூடுதலாக அமைக்க வேண்டியுள்ளது.

மாநகராட்சி எல்லைக்குள் விடுபட்டுப்போன பகுதிகளிலும், மேற்குறிப்பிட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகள் மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கப்படவுள்ள நிலையில் அப்பகுதியிலும் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்தும் வகையில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியுள்ளது.

ஏற்கனவே விளாங்குறிச்சி கிராம ஊராட்சி நீங்கலாக மற்ற உள்ளாட்சி அமைப்புகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கை 2010 மக்கள் தொகைக்கு கணக்கிற்கொண்டு தயாரிக்கப்பட்டு வரும் நிலையில், மேற்படி உள்ளாட்சி அமைப்பிற்குண்டான திட்ட அறிக்கையினை 2014 ம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் மக்கள் தொகையினை கணக்கிற்கொண்டும், விளாங்குறிச்சி கிராம ஊராட்சி பகுதியினையும் இணைத்தும் மற்றும் மாநகராட்சியில் விடுபட்டுப்போன பகுதிகளில் 125 கி.மீ. நீளமுள்ள சாலைகளை இணைத்து ஒருங்கிணைந்த திட்ட அறிக்கையினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகவே தயாரிக்கவும், அதற்கான நிதியினை ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகளால் செலுத்தப்பட்ட தொகை நீங்கலாக செலுத்தப்படவேண்டிய ஆய்வுத்தொகையினை அரசிடமிருந்து திட்ட அறிக்கை தயாரிப்பு நிதியிலிருந்து (Financial Assistance from the Project Preparation Facility - PPF) பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :–

அ. தற்போதுள்ள மாநகராட்சி பகுதியில் விடுபட்டுபோன பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்தனை செயல்படுத்துவதற்கு தயாரிக்கப்படும் திட்ட அறிக்கையினை மாநகராட்சியுடன் கலந்தாலோசித்து தயாரிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினை கேட்டுக்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ. மாநகராட்சியின் விடுபட்டுப்போன பகுதிகள் மற்றும் மாநகராட்சி விரிவாக்க பகுதிகளில் வரும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகள் ஒருங்கிணைந்து பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்தப்படும் வகையில் ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக தயாரிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக தயாரிக்கப்படும் திட்ட அறிக்கைக்கு உள்ளாட்சி அமைப்புகள் செலுத்திய கட்டணத் தொகை நீங்கலாக செலுத்தப்பட வேண்டிய ஆய்வு கட்டணம் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஏற்படும் உத்தேச செலவினத் தொகையினை அரசின் திட்ட அறிக்கை தயாரிப்பு நிதியிலிருந்து (Financial Assistance from the Project Preparation Facility - PPF) பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஈ. திட்ட அறிக்கை தயாரிக்க ஆகும் மொத்த உத்தேச செலவினத் தொகையினை அரசால் அனுமதிக்கப்படும் நிதிக்குள் மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினை கேட்டுக்கொள்ளலாம்.

ந.க.எண். 12069 /06/JN4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 61 நாள் 10.08.2011</u>**

அலுவலகக் குறிப்பு அ, ஆ, இ, ஈ ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண் 22

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் மூன்றின்கீழ் தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியானது கோயம்புத்தூர் மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுவரும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக ரூ. 1350 இலட்சங்கள் அளவிற்கு கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதன் வட்டிவிகிதம் 8% ஆகும். மாமன்றம் தனது தீர்மானம் எண் 315 நாள் 30.07.2007-ன் வாயிலாக இந்த கடனுக்குரிய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டுள்ளது.

தற்போது ஜெர்மானிய நிதி நிறுவனத்தின் நிதியுதவி பெற்ற நீடித்த கட்டமைப்பிற்கான நிதியுதவி தமிழ்நாடு என்னும் திட்டத்தின்கீழ் கடன் பத்திரங்களை வெளியிட்டு நிதி திரட்டுவதாக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் முடிவு செய்துள்ளது.

மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டப்பட்டவுடன் ரூ. 83.50 கோடி அளவிற்கு குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்தின் மூலமாக 9 உள்ளாட்சி அமைப்புகளுக்கு மறுகடன் வழங்கவும் அதிலிருந்து கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூ. 1174.75 இலட்சம் மறுகடன் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டு உள்ளது. இதனுடைய வட்டிவிகிதம் சுமார் 7.50 சதவீதம். இது ஏற்கனவே மாநகராட்சி பெற்றுள்ள கடன் விகிதமான 8 சதவீதத்தைவிட குறைவாகும். இந்த கடன் பத்திர வெளியீட்டில் கோயம்புத்தூர் மாநகராட்சி பங்கு பெற்று மறு கடன் பெறுவதன் மூலமாக சுமார் ரூ. 24.36 இலட்சம் அளவிற்கு வட்டித் தொகையை சேமிக்க முடியும்.

குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் அலுவலகத்தில் இருந்து வரப்பெற்ற கடிதத்தில் மேற்கண்டவற்றின் அடிப்படையில் கீழ்கண்ட பொருள் குறித்து கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற ஒப்புதல் பெற்று அதன் விபரம் தெரிவிக்க கோரப்பட்டுள்ளது.

‘‘குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் வெளியிடப்படவுள்ள கடன் பத்திர வெளியீட்டில் பங்கு கொள்ளுதல்.

இந்த மாநகராட்சிக்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியளவினை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுதல்.

இது தொடர்பாக தமிழக அரசு மற்றும் குடிநீர் மற்றும் குடிநீர் சுகாதார கூட்டு நிதியம் ஆகியவை நிர்ணயித்துள்ள விதிமுறைகளை முழுமையாக பின்பற்றுதல்.’’

எனவே மேற்படி பொருள் குறித்து மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1) குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் வெளியிடப்படவுள்ள கடன் பத்திர வெளியீட்டில் பங்கு கொள்ள ஒப்புதல் அளிக்கலாம்.
2) கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியளவினை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள ஒப்புதல் அளிக்கலாம்.
3) இது தொடர்பாக தமிழக அரசு மற்றும் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் ஆகியவை நிர்ணயித்துள்ள விதிமுறைகளை முழுமையாக பின்பற்ற ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண். 8180/2003/பி 1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 62 நாள் 10.08.2011</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2, 3 ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 23

பொருள் - பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி – அரசாணை எண். 237 (ந.நி.மற்றும் கு.வ.) துறை நாள் 26.09.1996 தமிழ்நாடு மாநகராட்சி பணிவிதிகள் 1996 பாகம் III பொதுப்பணி விதிகள் விதி 3ஐ தளர்வு செய்து திரு ஆ. அமல்ராஜ், சுகாதார ஆய்வாளர் சிறப்பு நிலை – மாமன்ற செயலாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு அளிக்க அரசுக்கு பரிந்துரைத்தல் - மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுவது – தொடர்பாக.

------------------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் மாமன்ற செயலாளராக பணிபுரிந்து வந்த திரு. ம. சுந்தரராஜன், உதவி ஆணையாளர் (வருவாய்) ஆக பதவி உயர்வு பெற்றுச் சென்றதால், மாமன்ற செயலாளர் பணியிடம் தற்போது காலியாக இருந்து வருகிறது. மாமன்ற செயலாளர் பணியிடம் பூர்த்தி செய்யப்பட வேண்டியது மிகவும் அவசர அவசியமானதாகும்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு. ஆ. அமல்ராஜ், சட்டப்படிப்பு (பி.எல்) படித்துள்ளதாகவும், மாமன்ற செயலாளர் பணியிடத்தை நிரப்புவதற்குத் தேவையான பி.எல். கல்வித்தகுதியுள்ள கண்காணிப்பாளர் எவரும் கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரியவில்லை என்றும், தம்மை மாமன்ற செயலாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு செய்யும் வகையில் அரசுக்கு பரிந்துரை செய்யுமாறு வணக்கத்திற்குரிய மேயர், ஆணையர் ஆகியோருக்கு விண்ணப்பித்துள்ளார். மேலும் அரசு கடித எண் 1163/மா ந 4/11-1 ந.நி.(ம) கு.வ.துறை நாள் 13.01.2011 கடிதத்தில் திரு. ஆ. அமல்ராஜ், சுகாதார ஆய்வாளரின் கோரிக்கையை விதிகளின்படி ஆய்வு செய்து விரிவான அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் பொது சுகாதார சார்நிலை பணிகளில் வகுப்பு III ல் உள்ள சுகாதார ஆய்வாளர் பணியிடத்தில் திரு. ஆ. அமல்ராஜ் பணிபுரிகிறார். 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகளின் பொது பணியமைப்பு விதிகளில் விதி 3ன்படி, மாநகராட்சி பொது சார்நிலைப் பணியிலுள்ள கண்காணிப்பாளர் பதவியில் உள்ளவர்களை பதவி உயர்வு செய்வதன்மூலம் அல்லது நகராட்சி ஆணையர் அல்லது தலைமை செயலக தேர்வுநிலை பிரிவு அலுவலர்களை அயற்பணி மூலம் மன்ற செயலாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட வேண்டும். 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் பொது பணியமைப்பு விதிகளில் விதி 4ன்படி மாமன்ற செயலளர் பதவிக்கு பதவி உயர்வு மற்றும் அயற்பணி அடிப்படையில் பணியமர்த்த சட்டப்படிப்பில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

திரு ஆ. அமல்ராஜ், சுகாதார ஆய்வாளர் அவர்கள் சட்டப்படிப்பில் பட்டம் பெற்றுள்ளார். எனவே இவர் விதி 4ன்படி மன்ற செயலர் பதவிக்கு தகுதியை பெற்றுள்ளார். இருப்பினும் இவர் விதி 3ன்படி நியமன முறையை பூர்த்தி செய்யவில்லை. கோயம்புத்தூர் மாநகராட்சியில் கண்காணிப்பாளர் பதவியில் சட்டப்படிப்பு முடித்த தகுதி வாய்ந்தவர்கள் எவரும் இல்லை. திரு ஆ. அமல்ராஜ் சுகாதார ஆய்வாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடர்பாக தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை தொடர்புடைய குற்றச்சாட்டுக்கள் மற்றும் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை. திரு. ஆ. அமல்ராஜ், சுகாதார ஆய்வாளர் பதவியில் 21 ஆண்டுகளாக எந்த குற்றச்சாட்டுகளும் இன்றி பணிபுரிந்து வருகிறார். இவருக்கு இன்னும் 16 ஆண்டுகள் பணிக்காலம் உள்ளது. சுகாதார ஆய்வாளர் பணியிடத்தில் இவரது சிறப்பான பணி அனுபவத்தால் மன்ற செயலாளராக பதவி உயர்வு வழங்கும்பொழுது, மன்ற செயலாளர் பணியில் மேலும் திறமையுடனும், சிறப்பாகவும் செயல்பட முடியும்.

மேலும் மதுரை மாநகராட்சி, திருச்சி மாநகராட்சி மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சியிலும் சுகாதார ஆய்வாளர்களாக பணிபுரிந்தவர்களுக்கு பி.எல். கல்வித்தகுதியின் அடிப்படையில் விதி தளர்வு பெற்று மன்ற செயலாளர்களாக பதவி உயர்வு வழங்கி ஏற்கனவே அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, திரு. ஆ. அமல்ராஜ், சுகாதார ஆய்வாளரை 1996 ம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் பொது பணியமைப்பு விதி எண். 3க்கு விதி விலக்களித்து மன்றச் செயலாளராக பதவி உயர்வு வழங்க அரசுக்கு பரிந்துரைக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்காக மன்றத்தாள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண். 11977/2010/எம்.சி. 2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 63 நாள் 10.08.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

52-வது வார்டு மாமன்ற உறுப்பினரின் ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண் 24**

பொருள்– கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற தீர்மான எண்.173 நாள்.29.12.2009ன்படி குடிநீர் கட்டணம் திருத்தி அமைத்தல்– திருத்தியமைக்கப்பட்ட குடிநீர் கட்டண விகிதங்கள் வைப்புத் தொகை மற்றும் மேற்படி கட்டண விகிதங்கள் உள்ளடக்கிய குடிநீர் விநியோக துணை விதிகளுக்கு மீண்டும் மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

- - - - - - -

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றம் தீர்மான எண்.173 நாள் 29.12.2009ல் கீழ்கண்டவாறு குடிநீர் கட்டண விகிதங்கள் நிர்ணயம் செய்து அனுமதி வழங்கியுள்ளது.

**(ஆ) வீட்டு உபாயேகம் முறையில் வழங்கப்படும் குடிநீா் இணைப்புக்கு உண்டான குடிநீா் கட்டண விபரம்.**

| **வரிசை எண்.** | **குடிநீர் விநியோக முறை** | **வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு** |
|---|---|---|
| அ | ஒருமாத உபயோக அளவு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |
| 1) | 15,000 லிட்டர் வரை | ரூ.100.00 (குறைந்தபட்ச மாதாந்திர கட்டணம்) |
| 2) | 15,001 முதல் 20,000 லிட்டர் வரை | ரூ.6.00 |
| 3) | 20,001 முதல் 1,50,000 லிட்டர் வரை | ரூ.8.00 |
| 4) | 1,50,000 லிட்டருக்கும் மேல் | ரூ.10.00 |
| | ஒருமாத குறைந்தபட்ச கட்டணம் | ரூ.100.00 |
| | குடிநீர் கட்டண வைப்புத் தொகை | ரூ.5000.00 |

| வரிசை எண். | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக முறையில் மொத்த விநியோகம் 20 எம்.எம்.விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு |
|---|---|---|
| ஆ | ஒருமாத உபயோக அளவு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |
| 1) | 7500 லிட்டர் வரை | ரூ.5.25 |
| 2) | 7501 முதல் 10,000 லிட்டர் வரை | ரூ.6.00 |
| 3) | 10,001 முதல் 1,50,000 லிட்டர் வரை | ரூ.8.00 |
| 4) | 1,50,000 லிட்டருக்கும் மேல் | ரூ.11.00 |
| | ஒருமாத குறைந்தபட்ச கட்டணம் | ரூ.900.00 |
| | குடிநீர் கட்டண வைப்புத் தொகை | ரூ.10000.00 |

(ஆ) வீட்டு உபயோகம் அல்லாத முறையில் வழங்கப்படும் குடிநீர் கட்டண விபரம்.

| வரிசை எண் | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு | பொது நிறுவனங்கள் முதலியவற்றிற்கு மொத்த விநியோகம் 20 எம்.எம். விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு |
|---|---|---|---|
| ஆ | வீட்டு உபயோகம் அல்லாத பிற உபயோகத்திற்கு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | |
| | ஒருமாத உபயோக அளவு | | |
| 1. | 7500 லிட்டர் வரை | ரூ. 10.50 | ரூ. 10.50 |
| 2. | 7501 – 10000 லிட்டர் வரை | ரூ. 13.50 | ரூ. 13.50 |
| 3. | 10001 – 150000 லிட்டர் வரை | ரூ. 18.00 | ரூ. 18.00 |
| 4. | 150001 லிட்டருக்கு மேல் | ரூ. 22.50 | ரூ. 22.50 |
| | ஒருமாத குறைந்த பட்ச கட்டணம் | ரூ.525.00 | ரூ.1350.00 |
| | குடிநீர் கட்டண வைப்புத் தொகை | ரூ10000.00 | ரூ.15000.00 |

குழாய் முறையில் குடிநீர் விநியோக முறை

| | | |
|---|---|---|
| குழாய் முறையில் குடிநீர் வீட்டு உபயோகத்திற்கு | ஒவ்வொரு குழாய் இணைப்பு ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.50.00 |
| குழாய் முறையில் கிணற்று நீர் வீட்டு உபயோகத்திற்கு | 1. குழாய் இணைப்பு ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.50.00 |
| | 2. கூடுதல் குழாய் இணைப்பு ஒவ்வொன்றுக்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.60.00 |

திருத்தியமைக்கப்பட்ட குடிநீர் கட்டண விகிதங்களை 01.10.2010 முதல் வசூலிக்கப்படும். மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குடிநீர் கட்டணத்தில் 10% உயர்த்தி வசூலிக்கப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 436 (எ)ன்படி மேற்படி கட்டண விகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டது குறித்தான பொதுமக்களின் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்குமாறு கடந்த 14.12.2010 அன்று 4 தமிழ் நாளிதழ்களில் (காலை மற்றும் மாலை) விளம்பரமும் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மற்றும் அவர்கள் சார்பாக பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பெறப்பட்டதை கீழ்கண்டவாறு கொடுக்கப்படுகிறது.

1. திரு. க.கதிர்மதியோன், செயலாளர், கோயம்புத்தூர் நுகர்வோர் சங்கம்,
41, அரசு கலைக்கல்லூரி சாலை, கோவை – 1.

| வரிசை எண். | ஆலோசனை / ஆட்சேபனைகள் | குறிப்பு |
|---|---|---|
| 1 | இலவச குடிநீர் சலுகை செய்யக் கோருதல் | நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திலிருந்து பெறப்பட்ட செயல்முறை உத்திரவில் குறிப்பிட்டுள்ள (வழிகாட்டுதலின்)படியும் மற்றும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் (நகராட்சி / மாநகராட்சி) எந்தவிதமான இலவச குடிநீர் விநியோக சலுகை கொடுக்கப்படுவதில்லை. |
| அ | 20 மி.மீ விட்டத்திற்கு மேல் பயன்படுத்தும் அனைத்து இணைப்புகள் அடுக்குமாடி கட்டிடங்களுக்கு இலவச குடிநீர் சலுகை செய்யக் கோருதல் | நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திலிருந்து பெறப்பட்ட செயல்முறை உத்திரவில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதலின்படியும் மற்றும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் (நகராட்சி / மாநகராட்சி) எந்தவிதமான இலவச குடிநீர் விநியோக சலுகை கொடுக்கப்படுவதில்லை. |
| ஆ | 1,50,000 லிட்டருக்கு மேல் 20 மி.மீ விட்டம் உள்ள குழாய் பயன்படுத்தும் வீட்டு உபயோக முறை இணைப்புகளுக்கு கட்டண விகிதம் ரூ.11.00–என மாநகராட்சியால் நிர்னையம் செய்யப்பட்டுள்ளதை ரூ.10.00ஆக குறைக்கலாம் என கருத்து தெரிவித்தல். | குழாய் விட்டம் 20 மி.மீட்டருக்கு மேல் இருப்பதாலும் குடிநீர் தேவை அதிகமாக இருப்பதாலும் குடிநீர் கட்டண விகிதம் ரூ.10 என குறைப்பதை மாமன்றம் முடிவு செய்யலாம். |

**2.** திரு .டி. எ. பாலசுப்ரமணியம் (ஓய்வு), நகராட்சி பொறியாளர் நிலை – I,
**89**a, கிழக்கு லோகமான்ய வீதி, ஆர்.எஸ்.புரம், கோவை –2.

| வரிசை எண். | ஆலோசனை / ஆட்சேபனைகள் | குறிப்பு |
|---|---|---|
| 1 | மாநகராட்சியின் வருவாயை அதிகரிக்க குடிநீர் கட்டணம் உயர்த்தாமல் வேறு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு குடிநீர் கட்டண உயர்வை கைவிடக் கோருதல். | பில்லூர் குடிநீர் II –வது திட்டத்திற்கு மாநகராட்சி பங்குத் தொகை 30% கடன் உதவி பெற்று செயல்படுத்தப்படுவதால் குடிநீர் கட்டணம் உயர்த்துவது அவசியமாகிறது.<br>பில்லூர் குடிநீர் II –வது திட்டம் நிறைவேற்றுப்பட்டு அமல்படுத்தப்படும் போது அதற்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு கட்டணம் குடிநீர் கட்டணம் வசூலிக்கப்படுவதின் மூலம் செயல் படுத்தப்படும்.மேலும் கோயம்புத்தூர் மாநகராட்சியால் குடிநீர் கட்டணம் மற்றும் பராமரிப்பு கட்டணம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்படுவது குடிநீர் கட்டணம் வசூலிக்கப்படுவது மூலம்தான். |

மேற்படியார்களின் ஆலோசனைகளையும், ஆட்சேபனைகளையும் மற்றும் அதற்கான இவ்வலுவலக குறிப்பும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

எனவே, திருத்தி அமைக்கப்பட்ட குடிநீர் கட்டண விகிதங்கள் வைப்புத் தொகை, மற்றும் மேற்படி குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை விகிதிங்கள் உள்ளடக்கிய குடிநீர் விநியோக துணை விதிகளுக்கும் மாமன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண்.4848/2003/கு.வி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 64 நாள் 10.08.2011</u>**

பில்லூர் II ம் குடிநீர் திட்டம் செயல்பாட்டிற்கு வந்தபின்பு மாமன்றத்திற்கு பொருள் வைத்து கட்டணம் உயர்வு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

---

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

# <u>கோயம்புத்தூர் மாநகராட்சி</u>

**அனுப்புநர்**

**திரு ஆர். வெங்கடாசலம்,**
**மேயர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி,**
**கோயம்புத்தூர்- 641 001**

**பெறுநர்**

**மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,**
**ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,**
**வார்டு குழுத் தலைவர்கள்,**
**நியமனக்குழு உறுப்பினர்,**
**நிலைக்குழு தலைவர்கள் மற்றும்**
**அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி.**

**அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி.**

**சட்டமன்ற உறுப்பினர்கள்**
**(சிங்காநல்லூர் , கோவை தெற்கு,**
**கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்**
**சட்டமன்ற தொகுதிகள்),**

**பாராளுமன்ற உறுப்பினர்கள்**
**(கோவை மற்றும் பொள்ளாச்சி**
**பாராளுமன்றத் தொகுதிகள்)**

**<u>ந.க.எண் : 5594/ 2011 / எம்சி. 8 நாள் : 06 .08.2011</u>**

**<u>அய்யா /அம்மா,</u>**

**பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - கூடுதல் பொருள் அனுப்புவது - தொடர்பாக.**

-----------

**கோயம்புத்தூர் மாநகராட்சியில் 10.08.2011 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் நடைபெறும் மாமன்ற சாதாரணக் கூட்டத்திற்கான கூடுதல் பொருள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/உண்மை நகல் /**

**மாமன்ற செயலாளர்**

**நகல் :**

**துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**
**ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**

**பொருள் எண் 25**

பொருள் - சமூகநலத் திட்டங்கள் - கோயம்புத்தூர் மாவட்டம் - கோவை மாநகராட்சி பகுதிகளில் இந்திராகாந்தி தேசீய முதியோர் விதவைகள் மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய விண்ணப்பதாரர்களுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பட்டியலில் பெயர் சேர்த்து BPL எண் வழங்குவது – தொடர்பாக

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் முதியோர், விதவைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோர்களின் 1731 விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேர்முக கடிதம் எண். 23399/2009/ஏ3 நாள் 24.06.2011-ல் பரிந்துரைக்கப்பட்டு பெறப்பட்டது. அதன்படி களஆய்வு செய்யப்பட்டதன் விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 1731 |
| இரண்டு முறை பதியப்பட்டது | 373 |
| ஆய்வு செய்யப்பட்டது | 1358 |
| தகுதியுடையவர்கள் | 319 |
| தகுதியற்றவர்கள் | 111 |
| தவறான முகவரி | 118 |
| குடிபெயர்ந்தவர்கள் | 91 |
| இறந்தவர்கள் | 41 |
| உதவித்தொகை பெறுபவர்கள் | 664 |
| கதவு அடைப்பு | 14 |

எனவே மேற்படி தகுதியுடைய 319 விண்ணப்பதாரர்களின் பெயர்களை வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பட்டியலில் சேர்க்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 433/2011/எம்இ.6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 65 நாள் 10.08.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி